விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-6368)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 03 வெள்ளிக்கிழமை (17.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 149

## எவ்விதமான இடையூறுகள் வந்தாலும்
# முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்துவோம்

### அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நீதியரசர் விக்னேஸ்வரன் அழைப்பு



*(யாழ்ப்பாணம்)*

*எவ்விதமான இடையூறுகள் வந்தாலும் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்துவோம் என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். இந் நிகழ்வில் அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறும் விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.* (23.ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதத்தை தூண்டும் அரசியலே நாட்டில் காணப்படுகின்றது
### ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் கடந்த மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்று மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையில் தற்பொழுது இனவாதத்தை தூண்டும் அரசியலே நாட்டில் காணப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார 23

*மிருசுவிலில் 8 தமிழர்கள் படுகொலை*
## இராணுவ அதிகாரியின் தூக்கை உறுதி செய்தது உயர் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மிருசுவில் பிரதேசத்தில் 2000ஆம் ஆண்டு 8 தமிழர்களைப் படுகொலை செய்த குற்றத்துக்கு இராணுவ அதிகாரிக்கு கொழும்பு மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தூக்குத் தண்டனைத் தீர்ப்பை கொழும்பு உயர் நீதிமன்றம் கடந்த 25ஆம் திகதி உறுதி செய்தது.

2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், 19ஆம் திகதி மிருசுவில் பகுதியில் தனது வீடுகளைப் பார்வையிடச் சென்ற 5 வயதுக்கும் 23

## முள்ளிவாய்க்காலில் உண்ணாவிரதம்




24

*வெசாக்கை முன்னிட்டு*
## 762 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

எதிர்வரும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு 762 சிறைக் கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்படவுள்ளனர்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இந்த சிறைக் 24



## யாழ்.பல்கலை மாணவர்கள் உட்பட மூவரும் நேற்று பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச் சாலை நடத்துநர் ஆகிய மூவரையும் ஒரு இலட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 3ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் ஒளிப்படம் மற்றும் இனப்படுகொலை தொடர்பான 24

## யாழ்.பல்கலை மே 22ஆம் திகதி ஆரம்பமாகலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் வரும் 22ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 24

## நல்லூர் ஆலயத்திற்கு குண்டு வைப்போம்
### அநாமதேய கடிதத்தால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்திற்கு குண்டு வைப்போம் என அநாமதேய கடிதம் ஒன்று நல்லூர் கோவிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டதால், ஆலய வளாகத்தில் 24

## வெசாக்தினத்தை அச்சமின்றி மக்கள் கொண்டாட வேண்டும்
### மகிந்த வேண்டுகோள்

(கொழும்பு)

வெசாக் தினத்தில் மக்கள் தான தர்மங்களை செய்வதற்கும் அறவழி செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் அரசாங்கம் முழு 23

## இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை நினைத்து செயற்படுக
### அமைச்சர் ரவி கருணாநாயக்க

(கொழும்பு)



இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை நினைவில் வைத்து செயற்பட வேண்டும் என மின் வலு, எரிசக்தி மற்றும் தொழில் 24

## கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க ரிஷாத் கோரியது உண்மையே - மகேஷ் சேனநாயக்க

(கொழும்பு)



கடந்த ஈஸ்டர் தாக்குதலில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தது உண்மையே. ஆனால் அவரது கோரிக் 23

## மே-18 ஐ அனுஷ்டிக்க இராணுவம் எவ்வித இடையூறும் விளைவிக்காது
### இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க

(கொழும்பு)

தமிழர்களினால் அனுஷ்டிக்கப்படுகின்ற மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தின நிகழ்விற்கு இராணுவத்தினரால் எந்தவித இடையூறுகளும் விளைவிக்கப்படாது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்று வதற்குத் தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

30 வயதுக்கு மேற்பட்ட, யாழ் நகரத்திற்கு அண்மையில் குடியிருப்பவர்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி பத்திரிகை அலுவலகத்திற்கு நேரில் வருகைதரவும்.

— முகாமையாளர்

# கோவிலுக்குச் சென்ற மூதாட்டியின் தங்க நகை வடமராட்சியில் அபகரிப்பு

(கரணவாய்) கோவிலுக்கு சென்ற மூதாட்டி தான் அணிந்து சென்ற தங்க நகையின் அரைவாசி பகுதியை வழிப்பறி கொள்ளையரிடம் பறி கொடுத்ததுடன் தாலிக் கொடி மட்டும் தெய்வாதீனமாக தப்பிய சம்பவம் வடமராட்சி தேவரையாளி பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வயோதிபமாது அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த வழிப்பறி கொள்ளையன் ஒருவன் வயோதிபமாதுவின் கழுத்தில் இருந்த தங்க நகைகளை பிடித்து இழுத்துள்ளான்.

வயோதிபமாதுவும் கழுத்தை இறுகப் பிடித்ததனால் அவர் அணிந்திருந்த சங்கிலி, நெக்கிளஸ் என்பவற்றின் அரைவாசி பகுதி வழிப்பறி கொள்ளையனால் அறுத்துச் செல்லப்பட்டது. தெய்வாதீனமாக அவர் அணிந்திருந்த தாலிக்கொடி மட்டும் கீழே விழுந்த போதிலும் அது தப்பிக் கொண்டது. இச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)

## ஏலவிற்பனை

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வருடாந்த பொருட்கணக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான ஏல விற்பனை 04.06.2019 செவ்வாய்க்கிழமை அன்று விற்கப்படவுள்ளது. ஏலவிற்பனைக் குரிய பொருட்களின் விபரங்களை பாடசாலை விளம்பரப்பலகையில் பாடசாலை நேரத்தில் (11.00 மணி - 1.00மணிவரை) பார்வையிடலாம்.

(சி-6400) - அதிபர்

## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.

வயது எல்லை: 18 தொடக்கம் 30 வரை

வேலைநேரம் : காலை 7.30 தொடக்கம் மாலை 5.30 வரை

(8747)

தொடர்பு: 076 118 4010

## இரதோற்சவம்

(உரும்பிராய்) உரும்பிராய் பார்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 9வது தினமான இன்று வெள்ளிக்கிழமை இரதோற்சவம் இடம் பெறவுள்ளது. காலை 8 மணியளவில் வசந்தமண்டப பூசைகள் ஆரம்பமாகி காலை 9.30 மணியளவில் அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை 18ம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ம-87)

## 31ம் நாள் சபிண்டீகரண கிரியை அழைப்பு

### அமரர் சின்னத்தம்பி வள்ளியம்மாள்



கடந்த 18.04.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் சின்னத்தம்பி வள்ளியம்மாள் அவர்களின் சபிண்டீகரண கிரியை நாளை (18.05.2019) சனிக்கிழமை காலை 7 மணியளவில் ஓடக்கரை தாமரைக் குளத்தடி மடத்தில் இடம் பெறும் என்பதனையும் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மாவடி ஒழுங்கை,
ஓடக்கரை, பருத்தித்துறை.

தகவல்: மகள்- சண்முகநாதன் ஜெயமணி (மணி)

(சி-6396)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி ஜெயச்சந்திரபோஸ் இந்திராணி

எமது பாடசாலையின் கல்விசாரா ஊழியர் செல்வி ஜெகாஸினி ஜெயச்சந்திரபோஸ் அவர்களின் அன்புத் தாயார் திருமதி இந்திராணி ஜெயச்சந்திரபோஸ் அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.

(8815)

## 01-ம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும்

தோற்றம்
13 . 02 . 1963

மறைவு
28 . 05 . 2018



### அமரர் முத்துக்குமாரு யோகராசா

கடந்த 28.05.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் முத்துக்குமாரு யோகராசா அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை (திவசம்) இன்று (17.05.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். எனவே அந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மாவடி ஒழுங்கை,
ஓடக்கரை,
பருத்தித்துறை.

தகவல்:
திருமதி புனிததாஸ்
யோகேஸ்வரி (சகோதரி)

(சி-6378)

## மரண அறிவித்தல்



### திருமதி சண்.ஜெயச்சந்திரபோஸ் இந்திராணி

அச்சுவேலி வடக்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்.ஜெயச்சந்திரபோஸ் இந்திராணி அவர்கள் நேற்று முன்தினம் (15.05.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வலி.கிழக்கு வட பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வுநிலை செயலாளர் - யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்க (விவசாய நுகர்ச்சி) சமாசத்தின் முன்னாள் பொது முகாமையாளர் சண்.ஜெயச்சந்திரபோஸ் அவர்களின் அன்பு மனைவியும், கல்லூரி வீதி, அச்சுவேலி வடக்கு இலவச சித்த ஆயுள்வேத (வைத்தியர்) பரியாரி ஆசையப்பா அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல் : மகன் - ராஜன்
076 349 0498

(8808)

# குடா ஓயாவில் விவசாயப் பண்ணை அருகே

# ஆயுதக் கிடங்கு கண்டுபிடிப்பு!

- ஸ்னைப்பர், இரு இயந்திரத்துப்பாக்கிகள் உட்பட எட்டு துப்பாக்கிகள், 4080 ரவைகள் மீட்பு
- அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற முஸ்லிம் நபர் கைது

(கொழும்பு)

விவசாயப் பண்ணையருகேயுள்ள ஆயுதக் கிடங்கை குடா ஓயா பொலிஸார் கண்டு பிடித்து பெருந்தொகையான ஆயுதங்களை மீட்டதுடன்,விவசாயப் பண்ணையின் உரிமையாளரான மொகமத் யஸ்மி அப்துல் வாஹிட் என்ற நபரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந் நபர் இலங்கையிலிருந்து அமெரிக்கா சென்று வாழ்ந்து வந்துள்ளார்.

அத்துடன் அமெரிக்கா பிரஜாவுரிமையையும் இவர் பெற்றிருக்கின்றமை ஆரம்ப விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

தனமல்விலைப் பகுதியைச் சேர்ந்த குடா ஓயா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் விரைந்து குறித்த விவசாயப் பண்ணையைச் சுற்றிவளைத்து தேடுதல்களை மேற்கொண்டனர்.

அவ் வேளையிலேயே பொலிஸார் ஆயுதக் கிடங்கை கண்டுபிடித்து அவற்றை மீட்டனர்.

ஸ்னைபர் துப்பாக்கிகள் இரண்டு இயந்திரத் துப்பாக்கிகள், கைத் துப்பாக்கிகள் உள்ளிட்டு எட்டு துப்பாக்கிகள்,இரு நவீன ரிவோல்வர்கள், சன்னங்கள் மற்றும் தோட்டாக்கள் 4080,இரு கைவிலங்குகள், 14 கத்திகள், நான்கு மின்சார விளக்குகள் உள்ளிட்ட யுத்த உபகரணத் தொகுதிகள் ஆகியனவே மீட்கப்பட்டவைகளாகும்.

கொழும்புப் பகுதியின் கொகுவல சரணங்கார மாவத்தையின் வீடொன்றின் உரிமையாளரான மொகமத் யஸ்மி அப்துல் வாஹிட் என்ற நபர்,குடா ஓயாவில் விவசாயப் பண்ணையொன்றையும் நடத்தி வந்துள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸார் ஆயுதக் கிடங்கை கண்டுபிடித்து ஆயுதங்களை மீட்கும் போது உரிமையாளர் விவசாயப் பண்ணையில் இருக்கவில்லை.

அவர் கொகுவல வீட்டிற்கு சென்றதாக அறிந்த பொலிஸார் கொகுவல பொலிஸாருடன் இணைந்து குறித்த நபரைக் கைது செய்தனர்.

அவ் வேளையில் அவ் வீடு சோதனைக்குட்படுத்தப்பட்ட போது "சொட்கன்" என்று கூறப்படும் அனுமதி பெற்ற இரு துப்பாக்கிகளும் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டன. இது குறித்து குடா ஓயா பொலிஸாரும் கொகுவல பொலிஸாரும் இணைந்து தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

சீனாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக்காலை 5.15 மணியளவில் கொழும்பு. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். சீனாவின் பீஜிங் நகரில் இடம்பெற்ற ஆசிய நாகரிகங்கள் பற்றிய சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி கடந்த 13 ஆம் திகதி சீனாவுக்கு பயணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

(கொழும்பு)

சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துமாறு. இலங்கை அரசாங்கத்துக்கு ஐரோப்பிய ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களுக்கு பின்னர் இடம்பெறும் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக நாங்கள் கவலை கொண்டுள்ளோம்.

இவ்வாறான வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைதுசெய்யப்பட்டமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்று அரசாங்கத்துக்கு நாங்கள் அழைப்பு விடுப்பதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கும் வன்முறையை தூண்டுபவர்களுக்கும் சட்டம் சமமானதாக இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்." எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (இ-7)

## றிசாத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் மகிந்த கையொப்பம் இடவில்லை

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் பொது எதிரணியால் நேற்று கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பிரதிகள் வெளியாகியுள்ளன.

றிசாத்துக்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு இந்தப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்தப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கையொப்பம் இடவில்லை. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் எஸ்.வியாழேந்திரன் மட்டுமே கையொப்பம் இட்டுள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர், மகிந்த ராஜபக்ஷ எதிர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சில தவறுகள் உள்ளன. அதனை அவசரப்பட்டு இப்போது ஏன் சமர்ப்பிக்க வேண்டும்? அதில் உள்ள தவறுகள் பிரேரணை தோற்பதற்கே வழிவகுக்கும்.

தோற்கும் பிரேரணையைக் கொண்டுவந்து றிசாத்துக்கான செல்வாக்கைப் பெருக்காதீர்கள். எனவே, முதலில் பிரேரணையில் உள்ள தவறுகளைத் திருத்துங்கள்.

அதன்பின்னர் அதனை ஆதரிப்பதா? இல்லையா? என்று நான் முடிவெடுப்பேன் என்று பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் மகிந்த தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### 60 எம்.பிக்களின் கையொப்பத்துடன்

## றிசாத்துக்கு எதிரான பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள குறித்த பிரேரணை நேற்று வியாழக்கிழமை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் தலைமையில் அமைச்சர் றிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி தாயும் மகளும் படுகொலை!

### இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இரு பெண்கள் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இரத்தினபுரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எகொட மல்வல பகுதியில் வீடொன்றில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் குறித்த இரு பெண்களின் சடலங்களும் பிரதேச மக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மீட்கப்பட்டுள்ளன.


43 மற்றும் 75 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் தாயும் மகளும் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-7)



பயிற்சியின்போது இங்கிலாந்து வீரர் மார்க் வூட்

# மீண்டும் வருவோம்

## 'வீரன்' வோட்சன் நம்பிக்கை



பிரிமியர் தொடரின் 12வது சீசன் இறுதிப் போட்டியில் சென்னை அணி, ஒரு ஓட்ட வித்தியாசத்தில் மும்பையிடம் தோற்றது. இடது முழங்காலில் ரத்தம் வழிய போராடிய சென்னை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் வோட்சன், 80 ஓட்டங்கள் குவித்தார். பிறகு ஆறு தையல்கள் போடப்பட்டன.

வோட்சனின் இச்செயல் அனைத்து ரசிகர்களையும் நெகிழ வைத்தன. இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ வெளியிட்டார். அதில்,'கடந்த சில நாட்களாக எனக்கு அன்பு, ஆதரவு, வாழ்த்துக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி. மும்பைக்கு எதிரான இறுதிப் போட்டி சிறப்பாக இருந்தது. இதில் வெற்றிக்கு அருகில் சென்று விட்டோம். அடுத்த ஆண்டு மீண்டும் வருவேன், இழந்த கிண்ணத்தை மீண்டும் பெறுவோம்,' என தெரிவித்துள்ளார்.

சென்னை வீரர் ஹர்பஜன் சிங் வெளியிட்ட 'இன்ஸ்டாகிராம்' பதிவில்,'சென்னை அணிக்காக வியர்வை, ரத்தம் சிந்தி போராடிய சகோதரர் வோட்சன் எல்லோரையும் கவர்ந்து விட்டார்,' என தெரிவித்துள்ளார்.


## சேவை நலன் பாராட்டு



திரு
**பொன்னையா யோகராசா**

சேவைக்காலம்: 14.12.1987 தொடக்கம் 17.05.2019 வரை

விஞ்ஞானத்தின் விந்தைகளை
கற்ற வித்தகன் – ஆசிரியராய்
விவசாயத்தில் விஞ்ஞானத்தின்
விதைகளை விதைத்த பாட்டாளி
முப்பதுடன் ஈராண்டுகள்
முழுப்பணி செய்து தன் சேவைக்கு
விடை கொடுக்கும் சேவகனை
வாழ்த்துகின்றோம்

யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆசிரியராக கடமையாற்றி 32 வருட கால சேவையில் ஓய்வுபெற்றுச் செல்லும் **பொன்னையா யோகராசா** அவர்களை ஓய்வுகாலத்தில் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(8818)

வாழ்த்துவோர்: விஞ்ஞான ஆசிரிய நண்பர்கள்



3ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 07 - 1944
மறைவு 20 - 05 - 2016

அமரர்
**தனலஷ்மி நாகரத்தினம்**

7ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 31 - 03 - 1936
மறைவு 07 - 10 - 2012

அமரர்
**திருநாவுக்கரசு நாகரத்தினம்**
(சாந்தி அச்சக உரிமையாளர்)

ஆல விருட்சமாயிருந்து அர்ப்பணிப்புடனான அரவணைப்புடன் கூடிய உங்கள் வழிகாட்டலில் வாழ்ந்துவரும் நாங்கள் எமது உயிர் உள்ளவரை உங்களை மறவோம். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இல.92, (150) நாவலர் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

077 396 5214 தயா அச்சகம், தயா வெளியீடு



சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில்

ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு

# ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

நாற்பத்து நான்காவது ஆண்டு

வசந்த வைகாசி மகோற்சவ பெருவிழா - 2019

## தேர்த் திருவிழா

**இன்று 17.05.2019 வெள்ளி காலை 10 மணிக்கு அம்பாள் நவகோணச் சித்திரத் தேரில் ஆரோகணித்தல்**



ஊர் கூடி வடம் பிடித்து தேர் இழுப்போம்



**ஆக்கம்** அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயர்

**பாடியவர்** TMS **இராகம்** கமாஸ் **தாளம்** ஆதி

**பல்லவி**

ஊர் கூடி வடம் பிடித்தே உளம் உருகச் சித்திர
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி (ஊர்கூடி)

**அனுபல்லவி**

வாராகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாம சுந்தரி (ஊர் கூடி)

**சரணம்**

தேரின் திருத்தொங்கல் வாசமாலை சூட
நாதஸ்வகானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் கூழி பெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின் புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள் (ஊர்கூடி)

புன்னகை புரிந்தருள் பொலிவுறத் தந்தனள்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்ன குறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுதத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர்கூடி)

*"தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்"*

**தேர்த்திருவிழா உபயகாரர்**
**பரிபாலன சபை, தில்லையம்பதி**

# முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் ஒரே நேரத்தில் அரங்கேறியது எவ்வாறு?

## அரசிடம் வேலுகுமார் கேள்வி



(கண்டி)

குருநாகல், புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒரே நேரத்தில் வன்முறையாளர்கள் அணி திரண்டது எவ்வாறு? என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் அரசிடம் கேள்வியெழுப்பியுள்ளார்.

எனவே இதன் பின்னணியிலும் பலம் பொருந்திய அரசியல் கரங்கள் இருப்பதாக அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கண்டி - திகன பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "83ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தின் போது தலைநகர் கொழும்பிலும் மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட அடிப்படையில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

இனவாதிகளால் தமிழ் மக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதுடன், அவர்களின் சொத்துக்களும் அழிந்து நொறுக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட அச்சமும் பீதியும் இன்னும் தமிழர்களின் மனங்களைவிட்டு முழுமையாக அகலவில்லை. அந்த ஆறாவடுக்கள் ஆயுள் முழுதும் மாறாது என்றே கூறவேண்டும்.

இந்நிலையில் கடந்த 13ஆம் திகதி இரவும் அதன் பின்னரும் குருநாகல், புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட அடிப்படையில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. முஸ்லிம் மக்களின் வீடுகளும் வர்த்தக நிலையங்களும் சேதமாக்கப்பட்டன.

ஒரே தடவையில் வன்முறையாளர்கள் அணி திரண்டது எப்படி? ஒரே மாதிரியான பொல்லுகள் எங்கிருந்து வழங்கப்பட்டன? சட்டம், ஒழுங்கை கையிலெடுப்பதற்கு எப்படி துணிவு வந்தது? இவற்றை ஒப்பிட்டு, ஆராய்ந்து பார்த்தால் இதன் பின்னணியிலும் பலம் பொருந்திய அரசியல் கரங்கள் இருப்பதாகவே சந்தேகம் எழுகின்றது. எனவே, விசாரணை ஆணைக்குழு அல்லது நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப்பட்டு இவை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஒரு சிலருக்காக ஒட்டுமொத்த சமூகத்தையுமே பயங்கரவாதிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதாலேயே இனவாதம் தூண்டப்படுகிறது.

முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக வன்முறைகள் இடம்பெறுகின்றன. சம்பவங்கள் இடம்பெற்ற பின்னர் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதைவிட, இனியும் அவ்வாறான அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதே காலத்தின் கட்டாயமாகும்.

முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்ல தமிழர்களுக்கு எதிராகவும் அடக்கு முறைகள், அடாவடிகள் இடம்பெற்றுதான் வருகின்றன. எனவே, தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நிலையானதொரு பொறிமுறை அவசியமாகும். நாம் இராணுவத் தீர்வை எதிர்பார்க்கவில்லை. சிவில் நடவடிக்கைகள் ஊடாகவே பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டிலும் வீட்டிலும் அமைதிப் பூக்கள் மலரும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிங்களப் பயங்கரவாதத்திற்கு நாட்டில் இடமளிக்கக் கூடாது

## கொழும்பு முதல்வர் ரோசி தெரிவிப்பு



(கொழும்பு)

முஸ்லிம் பயங்கரவாதத்திற்கு மட்டுமல்ல சிங்களப் பயங்கரவாதத்திற்கும் நாட்டில் இடமளிக்கக் கூடாது என கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முஸ்லிம் இனத்தவர்கள் பயங்கரவாதிகள் அல்ல. சகல முஸ்லிம்களும் அடிப்படைவாதிகள் அல்ல. எம்முடன் பல முஸ்லிம்கள் இருக்கின்றனர். பல்வேறு அழுத்தங்கள் மூலம் சிங்களப் பயங்கரவாதிகள் எழுச்சி பெற்றுள்ளனர்.

இதனை முற்றாக நிராகரிக்கின்றோம். சிங்களப் பயங்கரவாதத்திற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். தேசிய கீதத்தை மிகவும் கௌரவமாகப் பாட வேண்டும்.

தேசிய கீதத்தின் அர்த்தத்திற்கு அமைய செயற்பட வேண்டும். இதற்கு அமைய வாழ்ந்தால், எந்தச் சேதங்களும் ஏற்படாது எனவும் ரோசி சேனநாயக்க தெரிவித்தார். (இ-7)

# சிகிரியாவை இலவசமாக பார்வையிட சந்தர்ப்பம்

சிகிரியா தொல்பொருள் மற்றும் அருங்காட்சியகத்தை இம்மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவசமாகப் பார்வையிடுவதற்கான வசதி செய்யப்பட்டிருப்பதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

வெசாக் நோன்மதித் தினம் மற்றும் தேசிய தொல்பொருள் மற்றும் அருங்காட்சியக தினத்துக்கு அமைவாக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிகிரியா பகுதிக்குச் செல்லும் பொழுது காணப்படும் தொல்பொருள் கண்காட்சி மற்றும் கல்வி வேலைத் திட்டங்கள் பல இந்த 3 நாட்களிலும் மேற்கொள்ளப்படுவதாக கலாசார நிதியத்தின் சிகிரியாத் திட்ட முகாமையாளர் மேஜர் அநுர நிசாந்த தெரிவித்துள்ளார். (இ-7)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## விஜயரட்ணம் அரியமலர்



பண்பின் உறைவிடமாய்!
அன்பின் இலக்கணமாய்!
உன் ஆறுதல் அரவணைப்பை
இனி யார் தருவார் எமக்கு!
மண்ணுலகில் எமக்கெல்லாமாய்
இருந்தது போல,
விண்ணுலகில் இருந்தும்
எமைக் காத்திடுவாய் அம்மா!

தோற்றம் 1946.12.25
மறைவு 2018.05.29

18.05.2019 நாளை சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(8790)

2 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**மேடம்:** விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர் கள், உடல் நலன் சீராகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, விருப்பங்கள் நிறைவேற விரதம், வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள்.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்:** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**தனுசு:** விலை உயர்த்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் வருகையுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், திடீர் பயணங்களினால் பலனுண்டு, சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கன்னி:** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு, திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும்.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி, புத | செவ், ராகு |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி | | |
| | | | |
| சனி, குரு, கேது | | சந் | |

17.05.2019
வைகாசி 03, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு
திரயோதசி காலை 5.57 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 4.29 மணிவரை
சுவாதி பின்னிரவு 3.26 மணிவரை
சுபநேரம் 5.53-7.23 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53 மணிவரை
தொலைத் தொடர்பு தினம்

வளவன்

# இராணுவச் சீருடையை ஒத்திருந்த உடைகளால் கைதான 11 பேருக்கும் தலா ஒரு லட்சம் ஆட்பிணை

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் இராணுவச் சீருடையினை ஒத்த உடைகளை வைத்திருந்த 11 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் அனுமதியளித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நகர்ப் பகுதியிலுள்ள புடைவை நிலையங்களில் பருத்தித்துறைப் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந் நடவடிக்கையின் போது 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை அன்றிரவே பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதியின் வாசஸ்தலத்தில் பொலிஸார் முற்படுத்திய போது அவர்களை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் விடுவித்ததுடன் வழக்கை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

மேலும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை அவர்கள் 11 பேரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் கையொப்பம் இடவேண்டும் எனவும் உத்தரவில் தெரிவித்தார். (இ-60)




# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வடகிழக்கு தேவஸ் தான சங்கட ஹர சதுர்த்தி விரதம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெறும்.

இவ்உற்சவம் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜையுடன் வசந்த மண்டபப் பூசை என்பன இடம்பெற்று வீதிவலம் வருதலுடன் நிறைவடையும். (5)

# "மத அடிப்படைவாதங்களும் மானுடத்தின் சிதைவும்" விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "மத அடிப்படைவாதங்களும் மானுடத்தின் சிதைவும்" என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை (பௌர்ணமி தினம்) பிற்பகல் 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

தாயகம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதான உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் ம.திருவரங்கன் ஆற்றவுள்ளார். (இ-5)

# பருத்தித்துறை கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்





(கரணவாய்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் பருத்தித்துறை முனை கடற்கரையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம், பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் அ.சா.அரியகுமார், உப தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள், பருத்தித்துறை நகரசபை உப தவிசாளர், நகரசபை உறுப்பினர்கள், வல்வெட்டித்துறை நகரசபை உப தவிசாளர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-60)

# மத்தியஸ்த சபை அமர்வு நாளை மறுதினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இதுவரை இடம் பெற்று வந்த நல்லூர் மத்தியஸ்த சபை அமர்வு, நாளை மறுதினம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறுமென நல்லூர் மத்தியஸ்த சபைத் தவிசாளர் நா. நித்தியானந்தன் அறிவித்துள்ளார். (5)

# முழுநிலா நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை 5 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் ம.ரகுநாதன் தலைமையில் இடம் பெறும்.

இக் கருத்தரங்கின் வளவாளராக மறவன் புலவு க.சச்சிதானந்தன் கலந்து கொண்டு இன்றைய இலங்கையில் ''இந்து மதம்'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (5-10)

# விளக்க மறியல் வழக்குகள் இன்று

(யாழ்ப்பாணம்)

20.05.2019 ஆம் திகதி திங்கட்கிழமை பொது விடுமுறை என அரசால் அறிவிக்கப்பட்டுள்ளமையால், மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்ற விளக்கமறியல் வழக்குகள் 17.05.2019 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூப்பிடப்படும் என்றும், ஏனைய வழக்குகள் 17.06.2019 ஆம் திகதி திங்கட்கிழமை கூப்பிடப்படும் என்றும் மன்றின் கட்டளைப்படி பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

# வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்க அதிபர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக இழுபறி நிலையிலுள்ள வலிகாமம் கல்வி வலய வலயக் கல்விப்பணிப்பாளரை நியமிக்குமாறு உடுவில் கோட்ட அதிபர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடமாகாணத்தில் அதிக பாடசாலைகளைக் கொண்ட வலயமாகக் காணப்படுகின்ற வலிகாமம் கல்வி வலயத்தின் வினைத்திறன் மிக்கச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்காமை வருத்தத்தை ஏற்படுத்துகின்றது. கல்வித்துறையிலும், விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்குகின்ற எமது வலயத்தின் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டு செல்லக் கூடிய எமது வலயத்தில் கடந்த காலத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய சு.சுந்தரசிவத்தை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-10)

# வீதியோர மரநடுகை



(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையால் நிழல் தரும் மரங்கள் நாட்டும் வைபவம் நேற்றுக் காலை கொக்குவில் பகுதியில் இடம்பெற்றது.

இதில் உப்புமடம் சந்தியில் இருந்து கொக்குவில் புகையிரத நிலையம் வரையான வீதியின் ஒரு புறத்தில் மரங்கள் நாட்டப்பட்டன.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர், செயலாளர், யாழ்.பல்லைக்கழக பேராசிரியர் கிஷ்ணராஜா மற்றும் சபை ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-10-272)

# விளம்பரப் பலகை விசமிகளால் சேதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கச்சாய் வீதியில் காணப்பட்ட இரண்டு விளம்பரப் பெயர்ப் பலகைகளை கடந்த செவ் வாய்க்கிழமை இரவு இனந் தெரியாத விசமிகள் பிடுங்கிச் சென்றுள்ளனர்.

கச்சாய் வீதி அருமைநாயகம் ஒழுங்கையில் அமைந்துள்ள அரிசி உற்பத்தித் தொழிற்சாலை மற்றும் அரைக்கும் ஆலை ஆகியவற்றின் விளம்பரப் பெயர்ப் பலகைகளே இவ்வாறு விசமிகளால் அடியோடு பிடுங்கிச் செல்லப்பட்டுள்ளன. (இ-5-30)

# 21 வது நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் அமரர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் 21 ஆவது நினைவுதின நிகழ்வு இன்று 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். (இ-5)

# கடற்கரையோரத்தில் இராணுவம் சுற்றிவளைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கடற்கரையோரப் பகுதிகளில நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். சாவகச்சேரி - தம்புதோட்டம் படை முகாமிற்கு அருகாமையில் கடற்கரை ஓரமாகவுள்ள குடியிருப்புப் பகுதியிலேயே இச் சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம் பெற்றது. இதன்போது வெற்றுக் காணிகள் மற்றும் பாழடைந்த கட்டடம் ஆகியவற்றையும் சோதனையிட்டனர். (இ-30)



உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களில் பலியானோருக்கான ஆத்ம அமைதிப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் யாழ்.மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய இயக்குநர் ஜோ.ஜெஸ்ரின் தலைமையில் இடம் பெற்றது.

# வழக்கிற்காக வந்த யாழ்.பல்கலை.மாணவர்கள்



(யாழ்ப்பாணம்)

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் ஆகியோர் நேற்றுக் காலை யாழ்.நீதவான் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.

கடந்த மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகளின் தலைவரின் புகைப் படம் மற்றும் போரின் போது கொல்லப்பட்டவர்களின் புகைப்படம் என்பவற்றை வைத்திருந்ததாகத் தெரிவித்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். இந்நிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட நிலையில் மூவரும் நீதி மன்றிற்கு அழைத்து வரப்பட்டனர். (இ-10)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2019 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான இரசாயனவியல், பௌதீகவியல் பாடங்களுக்கான இலவசக் கருத்தரங்கும் வழிகாட்டிக் குறிப்பேடுகள் வழங்கும் நிகழ்வும் நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கான அனுசரணை சிரேஷ்ட சட்டத்தரணி வி.தேவசேனாதிபதி. மேலதிக விபரங்களுக்கு 077 113 3400 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5-10)

# அரபு மத்ரஸாக்கள் தொடர்பில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி சப்ரி வலியுறுத்து

(கொழும்பு)

அரபு மத்ரஸாக்கள் தொடர்பில் ஒரு ஒழுங்குமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்ரஸாக்களின் பாடவிதானங்கள், கற்பிப்பவர்கள் மற்றும் மத்ரஸாக்களுக்கு பணம் கிடைக்கும் வழிமுறைகள் தொடர்பில் ஒரு ஒழுங்குமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

கொழும்பு மன்றக் கல்லூரியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளான அமைச்சர் கபீர் ஹாசிம், முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாகிர் மாகார், பேரியல் அஷ்ரப் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அரசாங்கத்தால் பெண்கள் முகத்தை மறைப்பதற்கு தடை விதிக்கப்பட்டதன் பின்னர் முஸ்லிம் மக்கள் அதனை செயற்படுத்தியுள்ளதாகவும், அதேபோன்று முஸ்லிம் சமூகத்தால் முடியுமான அனைத்தையும் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோன்று எதிர்காலத்தில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

துரதிர்ஷ்டவசமாக ஒரு சிலர் அடிப்படைவாதிகளாக மாறியதால் தாம் சமூகம் மற்றும் இனம் என்ற அடிப்படையில் இணைந்து அதனை தோற்கடிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (இ-7)


விற்பனையாகிறது!

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி

முதன்நிலை ஒன்று, இரண்டு

தரம்-1, தரம் -2, தரம்-3, தரம் -4 மாணவர்களுக்கு

விலை 120/-

தரம் – 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு

பூமாலை மாதிரி வினாத்தாள்

(15 ஆசிரியர்களின் தொகுப்பில்)

பெற்றுக் கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

077 6258778

(C-6394)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

வாழ்த்துகின்றோம்



திரு.அப்புத்துரை இராதாகிருஷ்ணன் J.P

(ஆயுள்வேத மேற்பார்வையாளர்–கரைச்சிப் பிரதேச சபை)

எமது கிளிநொச்சி மாவட்ட சித்த ஆயுள்வேத பாதுகாப்புச்சபை இணைப்பாளரும் கரைச்சிப் பிரதேச சபைக் குட்பட்ட ஆயுள்வேத மேற்பார்வையாளர் மற்றும் விசக்கடி சித்த ஆயுள்வேத குடும்பத்தை சேர்ந்தவருமான திரு.அப்புத்துரை இராதாகிருஷ்ணன் அவர்கள் 15.05.2019 அன்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் கௌரவ நீதிபதி மா.கணேசராஜா அவர்களின் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் பெற்றமையையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

Congratulations

ஆயுள்வேத பாதுகாப்புச் சபை, கிளிநொச்சி மாவட்டம்.

(C-6396)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 59 செவ் 1 இல்
உயரம்: 175 cm
தகைமை/தொழில்: B.Com, Accountant
எதிர்பார்ப்பு:வெளிநாடுகுடியுரிமைபெண்
தொ.இ: B/2452

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பரணி 3
கி.பா: 25 ¼
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:Management, Manager, London
எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்
தொ.இ: B/2464

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L, சொந்ததொழில்
எதிர்பார்ப்பு: A/L படித்தபெண்
தொ.இ: B/2483

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விருட்சிகம் 2
கி.பா: 20 ½
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L, கட்டட பகுதி நிர்மாணிப்பாளர்
தொ.இ: B/2486

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 16 ¼
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தொழில் புரிபவர்
தொ.இ: G/4840

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: சூரி செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/4846

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 1
கி.பா: 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Computer Engineer, Lecturer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, உள்நாடு
தொ.இ: G/4847

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 50 செவ் 2 இல்
தகைமை/தொழில்: B.E பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச, தனியார் தொழில்
தொ.இ: G/4854

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

இன நல்லுறவு பற்றிப் பேசியவர்களைக் காணவில்லை

# ஆட்சிக்கு வரத்துடிக்கும் ஒரு குழுவினரின் நன்மைக்காகவே பயங்கரவாதத் தாக்குதல்

## மகிந்த அணி மீது இம்ரான் பாய்ச்சல்

(கொழும்பு)

இன நல்லுறவு பற்றிப் பேசிய சிலரை மினுவாங்கொடைத் தாக்குதலின் பின் காணவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கல்வி அமைச்சிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கரவாதி சஹ்ரான் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடக்கம் குருநாகல், மினுவாங்கொடை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அனைத்தும் ஆட்சிக்கு வரத்துடிக்கும் ஒரு குழுவினரின் நன்மைக்காகவே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் வரை நாட்டைக் குழப்பகரமான சூழ்நிலையில் வைத்திருக்கவேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது. நாட்டில் இவ்வாறான குழப்பங்களை ஏற்படுத்தி பெரும்பான்மை மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டி தேர்தலில் வெற்றிபெறவேண்டிய தேவை அவர்களுக்குள்ளது.

இவர்களுக்கும் இந்தச் சம்பவங்களுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம். உரிய ஆதாரங்களைத் திரட்டிய பின் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்ற இந்த குழப்பங்களை விளைவித்தவர்கள் யார்



என்பதை மக்கள் முன் வெளிக்காட்டுவோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் இந்நாட்டில் அப்பாவி முஸ்லிம்கள் அனைவருக்கும் பயங்கரவாத முத்திரை குத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரங்கள் இனவாதிகளால் திட்டமிட்டு பரப்பப்பட்டு பெரும்பான்மையினரை முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிரசாரங்களின் பின்னால் நன்கு திட்டமிடப்பட்ட அரசியல் பொருளாதார நோக்கங்கள் காணப்படுகின்றன.

இந்தத் தாக்குதலின் பின் இன ஒற்றுமையை வலியுறுத்திய பலரை கடந்த இரண்டு மூன்று நாட்களாகக் காணவில்லை. அப்பாவி முஸ்லிம்களின் பல கோடி ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்ட போது இன ஒற்றுமை பேச இவர்கள் வரவில்லை. இவர்களின் நோக்கம் இன ஒற்றுமையல்ல தமது அரசியல் பொருளாதார இருப்பைத் தக்க வைத்துக்கொள்வதேயாகும்.

நாட்டில் இவ்வாறான பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படும்போது சட்டம் ஒழுங்கு அமைச்சை பலாத்காரமாக வைத்திருக்கும் நபர் நாட்டில் இருப்பதில்லை. போதைப்பொருள் கைப்பற்றும் போது முன்னால் வருபவர் அசம்பாவிதங்கள் நடக்கும்போது முன்னால் வருவதில்லை. இந்த தாக்குதல் தொடர்பாக அவர் இதுவரை வாயைக் கூடத் திறக்கவில்லை.

நாட்டின் பாதுகாவலராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் எதிர்க்கட்சித் தலைவர் மினுவாங்கொடைச் சம்பவத்தின் பின்பு காணாமல்போயுள்ளார். சிறு சம்பவங்களுக்கும் ஊடகவியலாளர் மாநாடு நடத்தி தேசிய பாதுகாப்பு பற்றி அரசாங்கத்துக்கும் புலனாய்வுத் துறைக்கும் புத்திமதி சொல்லும் விமல் வீரவன்ச மற்றும் கம்பன்பில போன்ற காட்போட் தேசப்பற்றாளர்கள் இரண்டு நாட்களாக வெளியில் வரவில்லை.

ஆகவே நாடு எதிர்நோக்கியுள்ள இந்த அபாயகரமான சூழ்நிலையில் இருந்து வெளியே வர இந்த இனவாத அரசியல்வாதிகளின் பொய்ப் பிரசாரங்களுக்குள் அகப்படாமல் நாம் அனைவரும் இலங்கையர்களாக முன்னோக்கிச் செல்ல வேண்டும். கடந்த 30 வருட யுத்தத்தில் நாம் இழந்தவை அதிகம் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# திடீர் தீ விபத்தால் நான்கு வீடுகள் நாசம்

## 20 ஆடுகள் உயிரிழப்பு



(வத்தளை)

வத்தளை, மாபொல துவ வத்த பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் நான்கு வீடுகள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் வீட்டில் இருந்த 20 ஆடுகள் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த தீ விபத்தின் போது கொழும்பு தீயணைப்புப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயை அணைத்துள்ளனர்.

வீடு பலகைகளால் வடிவமைக்கப்பட்டதால் மிக விரைவாக தீ பரவியுள்ளதுடன் தீப்பரவலுக்கு மின் ஒழுக்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# லிட்ரோ ஹாஸ் நிறுவன பணிப்பாளர் சபைக்கு இடைக்காலத் தடை

(கொழும்பு)

லிட்ரோஹாஸ் நிறுவனத்திற்கு நிதியமைச்சால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையை இடைநிறுத்தி கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை நேற்றுப் பிறப்பித்துள்ளது. (இ-7)

அமைதியின்மையை ஏற்படுத்த முயன்ற

# 5 பேருக்கு விளக்கமறியல்

(கண்டி)

கண்டி மெனிக்கின்ன பிரதேசத்தில் அமைதியின்மையை ஏற்படுத்த முயன்ற ஐவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை, விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் சானக கலன்சூரிய உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவத்தில் மெனிக்கின்ன, தும்பராவ, கிரிவெமட்டிய, பிலவல முதலிய பிரதேசங்களைச் சேர்ந்த ஐவர் கடந்த செவ்வாய்க்கிழமை மெனிக்கின்ன நகரத்தில் அமைதியின்மையை ஏற்படுத்த முயன்ற போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த ஐவரையும் தெல்தெனிய நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்த போதே நீதவான் அவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

# ஏழு ஜி.பி.எஸ்கள் மீட்பு இருவர் பொலிஸாரால் கைது

உரிமையாளர் இல்லாமல் பொதி ஒன்றில் 2 ஜி.பி.எஸ். கொண்டு சென்ற பேருந்து நடத்துநர் மற்றும் அதனை அனுப்பிய வர்த்தகர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டதுடன் 7 ஜி.பி. எஸ்கள் மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியிலிருந்து கொழும்புக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை சென்ற தனியார் பேருந்தில் இருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பேருந்தை கல்லடிப் பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் காலை 9 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் சோதனையிட்டனர். இதன்போது பேருந்தின் முன் பகுதியில் பொதி ஒன்றைக் கண்டு அது யாருடையது என வினவினர். அதற்கு யாரும் உரிமை கோராத நிலையில், பேருந்து நடத்துநர் காத்தான்குடியிலிருந்து வர்த்தகர் ஒருவர் கொழும்பில் குறித்த விலாசத்திலிருந்து வந்து பொறுப்பேற்பார் என தம்மிடம் வழங்கியதாக தெரிவித்தார்.

இதனையடுத்து விசேட அதிரடிப்படையினர் அந்தப் பொதியை உடைத்து சோதனை செய்த போது அதிலிருந்து இரு ஜி.பி. எஸ். இருப்பதை கண்டு, நடத்துநரைக் கைது செய்ததுடன் பொதியை வழங்கிய காத்தான்குடி வர்த்தகரின் நிலையத்துக்குச் சென்று சோதனையிட்டதில் அங்கிருந்து 5 ஜி.பி.எஸ்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து வர்த்தகரையும் கைது செய்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# ஜனாதிபதி பயணித்த விமானம் விபத்து பேஸ்புக்கில் பதிவிட்ட மாணவனுக்கு மறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவிற்கு சென்ற விமானம் விபத்துக்குள்ளாகியது என பேஸ்புக்கில் பதிவிட்ட பல்கலைக்கழக மாணவனை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

போலிப் பிரசாரம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட குறித்த மாணவனை நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் அயேஷ விக்ரம வீரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான மாணவன் நகைச்சுவையாக பேஸ்புக்கில் பதிவு இட்டதாகவும் அவருக்கு நிபந்தனை அடிப்படையில் பிணை வழங்குமாறும் சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் இதுமிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டிய காலமே தவிர நகைச்சுவைக்கான காலம் அல்லவென கூறிய நீதிபதி பிணை கோரிக்கையை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனுமதிக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி க.பொ.த.(உ/த) புதிய மாணவர்களுக்கான கணிதம், உயிரியல், தொழில்நுட்பப் பிரிவுகளுக்கான அனுமதிக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் பெற்றோர்களுடன் வருகைதருமாறு அதிபர் எம்.ஞானசம்பந்தன் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2019- 15.06.2019



விகாரி வருடம் வைகாசி மாதப் பலன்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன், தன லாபாதிபதி புதனுடன் இணைந்து தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாகவே இருக்கும். எதிரிகளின் பலம் குறையும். இலாபம் எதிர்பார்த்ததைவிட இருமடங்காகும். அரசாங்க பதவியில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புகள் வரலாம். மாமன், மைத்துனர் வழியில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெறும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நிலையான வருமானம் வந்துசேரும்.

உங்கள் இராசிக்கு 5,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார் குரு பகவான். அவர் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து கொண்டு உங்கள் இராசியைப் பார்க்கிறார். 'குரு பார்க்க கோடிதோஷ நிவர்த்தி' என்பதால் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர். வீடு, வாகனம் ஆகியவற்றைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்கள் நல்ல ஒத்துழைப்புக் கொடுப்பார்கள். தொழிலில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும்.

"ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்" என்பது பழமொழி. அந்த அடிப்படையில் 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குருபகவான் 9 ஆம் பார்வையாக உங்கள் இராசியைப் பார்ப்பது யோகம்தான். பொன், பொருட்கள் சேரும். புகழ் கூடும். புதிய வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட வாய்ப்புகள் கைகூடி வரும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு.

சகாய ஸ்தானாதிபதி சுக்கிரன் 9 ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் தந்தை வழி சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். உடன் பிறப்புகள் உங்களை அனுசரித்துச் செல்வர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் அன்புக்கு பாத்திரமாகலாம். அதன் விளைவாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு நல்ல யோகமான நேரம் இது. பங்குதாரர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பலமுறை முயற்சி செய்தும் இதுவரை நடைபெறாத சில காரியங்கள், தற்போது துரிதமாக நடைபெறும். வசதி வாய்ப்புகள் பெருகும். வாரிசுகளின் முன்னேற்றத்திற்காக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றிபெறும். குறிப்பாக திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

இம்மாதம் வைகாசி விசாகத் திருநாள் வருவதால், முறையாக கவசம் பாடி முருகப் பெருமானை வழிபட்டு வந்தால், தன இலாபம் பெருகும்.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

## மாங்கல ஓசை மனையில் கேட்கும்

மே 18 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் குரு பகவான் விருச்சிக இராசிக்குச் செல்கிறார். அங்கிருந்து 8, 10, 12 ஆகிய இடங்களைப் பார்த்துப் புனிதப்படுத்துகிறார். எனவே தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு, புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். 'தொழிலை விரிவு செய்ய போதுமான மூலதனம் இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வரலாம். 'பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடவில்லையே' என்ற கவலை அகலும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகிச் சொந்த பந்தங்களின் உறவைப் புதுப்பித்துக் கொடுக்கும்.

மிதுன புதனின் சஞ்சாரம்




மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலம் ஆகும். இலாப ஸ்தானாதிபதி புதன் இலாப ஸ்தானத்திற்கு வருகிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புது முயற்சி ஒவ்வொன்றிலும் வெற்றி கிடைக்கும். மாமன், மைத்துனர் ஒத்துழைப்போடு சேமிப்பின் உச்சகட்டத்தை எட்டுவீர்கள். சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். செவ்வாயும் இலாப ஸ்தானத்தில் இருப்பதால் வாங்கிய சொத்தை விற்கவும் புதிய சொத்துக்களை வாங்கவும் விலகிச் சென்ற ஒப்பந்தங்கள் விரும்பி வந்து சேரவும் வழிபிறக்கும் நேரம் இது. இந்த காலத்தில் அங்காரக வழிபாடும், ராகு- கேதுக்கள் வழிபாடும் தங்கு தடைகளை அகற்றும். தன வரவைப் பெருக்கும்.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கப் போகிறார். எனவே ஜூன் 4 ஆம் திகதி ரிஷபத்திற்கு வரும் சுக்கிரனால் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும். அருளாளர்களின் ஆலோசனை அவ்வப்போது கைகொடுக்கும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் மக்கள் செல்வங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை அகலும். அதிக முயற்சி எடுத்தும் இதுவரை முடியாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கருத்து வேறுபாடு அகலும். உங்கள் பெயரில் தொடங்கிய தொழிலால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண முயற்சி மற்றும் மேற்படிப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த மந்தநிலை மாறும். தாய்வழி ஆதரவு திருப்திதரும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். பணிபுரியும் பெண்கள் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்ல வாய்ப்புகள் கைகூடிவரும். முருகப் பெருமான் வழிபாடும், அறுபத்து மூவர் வழிபாடும் வளர்ச்சியைக் கூட்டும்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், விரய ஸ்தானாதிபதியுடன் கூடியிருக்கிறார். எனவே விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். என்றாலும் குருவின் பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். ஆகையால் வீடு கட்டுவது அல்லது வீடு வாங்குவது போன்றவற்றில் ஈடுபாடு செலுத்தலாம். கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் சூழ்நிலையும் உருவாகும். பெண் பிள்ளைகளின் திருமணம் சம்பந்தமாக முயற்சி எடுத்திருப்பவர்கள், அதற்கான சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதில் கவனம் செலுத்தலாம். திடீர் மாற்றங்கள், ஊர், மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படும். வரும் மாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்வதுதான் நல்லது.

உங்கள் இராசிக்கு நான்காம் இடத்தில் குரு, சனி, கேது ஆகிய 3 கிரகங்கள் இருக்கின்றன. எனவே உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்குமா என்பதுசந்தேகம்தான். பணிபுரியும் இடங்களில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். வேலைப் பளு அதிகரிக்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு குறைவாகவே கிடைக்கும். எனவே எதைச்செய்தாலும் கொஞ்சம் யோசித்துச் செய்வது நல்லது. அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் இருக்கும் பொழுது ஆரோக்கியத்திலும் கொஞ்சம் தொல்லைகள் ஏற்படத்தான் செய்யும். மூட்டுவலி, முதுகு வலி போன்றவை வந்து கொண்டுதான் இருக்கும். போட்டிகளுக்கு மத்தியில் உங்கள் முன்னேற்றம் ஏற்படும்.

10 இல் இராகு இருப்பது நன்மைதான். சுயதொழில் புரிபவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படலாம். புதிய பங்குதாரர்கள் உங்களோடு சேர்ந்து பணிபுரிய விருப்பப்படுபவர் மூலதனம் நாங்கள் தருகிறோம். எங்களையும் பங்குதாரர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுவர். அங்ஙனம் வருகின்ற பொழுது அவர்கள் ஜாதகத்தை உங்கள் ஜாதகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து முடிவெடுத்துக் கொள்வதே நல்லது. பிள்ளைகளின், உடன்பிறப்புகள் வழியே ஏதேனும் ஒரு மங்கள நிகழ்ச்சி நடைபெறும். என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம் இன்றைக்கு அதிகவிலைக்கு விற்று அதன் மூலம் வருகிற தொகை உங்கள் கரங்களில் புரளும். எனவே கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

இம்மாதம் வைகாசி விசாகத் திருநாள்

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்

வருவதால், அன்றைய தினம் விரதமிருந்து பன்னிரு கரம் கொண்ட வேலவனைப் பணிந்து வழிபட்டால் புண்ணிய காரியங்கள் நடைபெறுவதில் எந்தத் தடையும் ஏற்படாது.

விருச்சிக குருவின் சஞ்சாரம்

மே 18 ஆம் திகதி விருச்சிகத்திற்கு குரு வருகிறார். அப்பொழுது அதன் பார்வை 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களிலும் பதிகிறது. எனவே பார்க்கும் இடங்கள் எல்லாம் புனிதமடைந்து உங்களுக்கு பல வழிகளிலும் நன்மைகளை வழங்கப்போகிறது. குறிப்பாக களத்திர ஸ்தானத்தை குரு பார்ப்பதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். விட்டுப்போன வரன்கள் மீண்டும் வரலாம். வீடு மாற்றங்களால் சில நன்மைகள் ஏற்படும். இதுவரை பாசம் காட்டாத பெற்றோர்கள் இப்பொழுது பாசம் காட்டத் தொடங்குவர். அவர்களின் ஒத்துழைப்போடு சில பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். தொழிலில் வரவேண்டிய பழைய பாக்கிகள் வசூலாகிப் பரவசப் படுத்தும். கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள்.




மிதுன புதனின் சஞ்சாரம்

மே 29 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் புதன். தொழில் ஸ்தானாதிபதி பலம் பெறும் இந்த நேரத்தில், எந்தத் தொழில் செய்பவராக இருந்தாலும் அதில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். 'நேர்முகத் தேர்விற்கு பலமுறை சென்றும் அதில் பலன் கிடைக்கவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது வேலையில் சேருவதற்காக அழைப்புகள் வரும். பணிபுரியும் இடத்தில் வாய்ப்பு கிடைக்கும். உறவினர்கள் பகை மாறி பாசம் காட்டுவர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல காரியங்களை முடித்து கொடுப்பர்.

ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்

ஜூன் 4 ஆம் திகதி ரிஷப இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் அளிப்பார். பூர்வீக சொத்துத் தகராறுகள் சாதகமாக முடியும். பரம்பரை சொத்துக்களில் இருந்த விவகாரங்கள் விலகும். நாட்பட்ட நோயில் இருந்து நிவாரணம் பெறுவீர்கள். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினர்களின் ஆதரவோடு அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்வீர்கள். இம்மாதம் வைரவர் வழிபாடும், அனுமன் வழிபாடும் வளர்ச்சியைக் கூட்டும்.


பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டிருக்கும். அர்த்தாஷ்டம குருவும், அர்த்தாஷ்டம சனியும், அர்த்தாஷ்டம கேதுவும் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகளும், அமைதிக் குறைவும் ஒருசில சமயங்களில் ஏற்படலாம். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்லாதிருப்பது நல்லது. பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். என்றாலும் கூடப் சகோதரர்களின் உறவில் திருப்தி ஏற்படாது. பணிபுரியும் பெண்களுக்கு திடீர் இடமாற்றங்கள் உருவாகலாம். சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய சலுகைகளில் தாமதங்கள் ஏற்படலாம். குலதெய்வ வழிபாடும், வெற்றிவேலன் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு உறு துணையாக இருக்கும்.

(தொடரும்)

# வவுனியாவில் இருப்பவர்கள் தீண்டத்தகாதவர்களா?

## நகர பிதா ஆதங்கம்



வவுனியா மாவட்டம் வெறுமனே அகதி முகாம்களுக்காக உருவாக்கப்பட்ட மாவட்டமாக அனைவரும் கருதுவதாக வவுனியா நகரசபை மேயர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார். வட மாகாண அதிகாரிகள் வவுனியா நகரைப் புறக்கணிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், அதனைக் கண்டிக்கும் வகையில் வவுனியா நகரசபை மேயர் நேற்று வியாழக்கிழமை குப்பை அகற்றும் வாகனத்தில் அலுவலகத்திற்கு பயணித்துள்ளார். இதன்போது அங்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், "வடக்கு மாகாண அதிகாரிகளின் புறக்கணிப்பால் வவுனியா நகர சபைக்குட்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நகரசபையில் வாகனப் பற்றாக்குறை காணப்படுவதாக பலமுறை தெரிவிக்கப்பட்டபோதும் இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வவுனியா என்றால் வெறுமனே அகதி முகாம்களுக்காக உருவாக்கப்பட்ட மாவட்டமாகவே அனைவரும் நினைக்கிறார்கள்.

யாழ்பாணத்தில் இருப்பவர்கள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், வவுனியாவில் இருப்பவர்கள் தீண்டத்தகாதவர்களாகவுமே வடக்கு மாகாண அதிகாரிகள் பார்க்கிறார்கள்.

நகரசபையை மாநகர சபையாக தரமுயர்த்தக்கூடிய நிலை இருந்தும் அது அவர்களாலேயே தடைப்படுகின்றது" என மேலும் தெரிவித்தார். (9-250)



# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## மரக்கன்றுகள் வழங்கிவைப்பு

(மன்னார்)

2009 இறுதி யுத்தத்தின் போது மரணித்த தமிழ் மக்களின் 10ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு முழுவதும் நினைவேந்தல்களுக்கு ஏற்பாடாகி வருகின்ற நிலையில் இறுதி நாள் நிகழ்வுகள் எமது மக்கள் பேரவலத்தின் கொடுமைகளை அனுபவித்த அந்த நாட்களை, நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக மக்கள் கூட்டாக அனுஷ்டிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் MSEDO ஏற்பாட்டில் வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் அனுசரணையுடன், அன்றையதினம் உயிரிழந்த அனைத்து மக்களின் நினைவாக ஒவ்வொருவரும் தமது வீடுகளில் அவர்களுக்காக ஒரு மரங்களை நாட்டி அவர்களுக்கான நினைவேந்தல்களை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாளை 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வின் போது மக்கள் இறந்தவர்கள் சார்பாக நடுவதற்கான மரங்களையும் குறித்த நிறுவனத்தினர் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில், இறந்த எம் மக்களுக்கான அடையாளங்களை உருவாக்குவோம். அவர்களின் நினைவேந்தல்கள் எப்போதும் சமூகத்தில் பிரதிபலிக்கக்கூடிய ஆக்கபூர்வமான நினைவேந்தல்களாக இருக்க வேண்டும் எனவும் இப் பத்தாவது நினைவேந்தலையிட்டு கோயில்கள், வீதிகள், பொது இடங்கள் ஆகியவற்றில் மரங்களை நாட்டுதல், அவர்கள் அனுபவித்த துயரங்களை நினைவுறுத்தும் வகையில் உப்பில்லாக் கஞ்சி சமைத்து பருகுதல் என்பவற்றின் ஊடாக எமது துன்பத்தை பகிர்ந்து கொள்வோம்.

*அவர்களுக்கு எமது நிலையான ஆத்ம* சாந்திப் பிரார்த்தனைகளை செலுத்துவோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (9-285)

## குடும்பத்தகராறு காரணமாக

# குண்டை வெடிக்க வைக்க முற்பட்டவர் கைது


மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் நேற்று இரவு குடும்பத் தகராறு காரணமாக கைக்குண்டுடன் சென்று குண்டை வெடிக்க வைக்க முயற்சித்த தந்தை ஒருவர் கைக்குண்டுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக மடு பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக அக் குடும்பத்திலுள்ள தந்தை மகனுக்கு இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியுள்ளது. இதையடுத்து வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே சென்ற தந்தை சற்று நேரத்தின் பின்னர் மறைத்து வைக்கப்பட்ட புதிய கைக்குண்டு ஒன்றினை எடுத்து வீட்டுக்குச் சென்று வெடிக்க வைக்க முயற்சி செய்துள்ளார். இதைப்பார்த்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் இச்சம்பவத்தை தடுத்து நிறுத்தியுள்ளார்.

இச்சம்பவத்தை அறிந்த அப் பகுதி மக்கள், கிராம அபிவிருத்திச்சங்கம் உடனடியாக மடு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளது. இந்நிலையில் நேற்று அதிகாலை பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் தேடுதல் சோதனை மேற்கொண்ட பாலம்பிட்டி 317 ஆவது படையினர் கைக்குண்டை எடுத்து வந்த 55 வயதுடைய பெரிய பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த நபரைக் கைது செய்துள்ளதுடன் அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது மறைத்து வைக்கப்பட்ட கைக்குண்டையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் பொலிஸார், படையினர் இணைந்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

கைப்பற்றப்பட்ட கைக்குண்டை செயலிழக்கச் செய்வதற்கு வவுனியாவிலுள்ள குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (9-285)



இந்தியத் தூதரகத்தினால் ஒரு தொகுதி புத்தகங்கள் கிளி நொச்சி நூலகத்திற்கு நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன. நேற்றுக் காலை கரைச்சி பிரதேச சபை தவிசாளர் தலைமையில் கரைச்சி பிரதேச சபையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் கலந்து கொண்டு குறித்த நூல்களை வழங்கி வைத்தார். (படம்:-பரந்தன் செய்தியாளர்)

## விவசாய கிராமங்களின்

# போக்குவரத்து வசதியை சீர்செய்யுமாறு கோரிக்கை

முல்லைத்தீவு கோட்டைகட்டி, அம்பலப்பெருமாள் குளம் ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து வசதி இன்மை மற்றும் பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் அன்றாடம் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர்பிரிவின் கீழுள்ள கோட்டைகட்டி குளம், அம்பலப்பெருமாள்குளம் போன்ற பழைமையான விவசாயக்கிராமங்கள் போக்குவரத்து வசதிகள் இன்மை மற்றும் பிரதானவீதி புனரமைக்கப்படாமை காரணமாக இங்கு வாழும் தாங்கள் பல்வேறு சிரமங்களிற்கு முகங்கொடுத்துவருவதாக தெரிவித்துள்ளனர்.

எந்த அடிப்படை வசதியைப் பெற்றுக்கொள்வதாயின் நீண்ட தூரம் சென்றே தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியிருப்பதாகவும் இதற்குப்போக்குவரத்து வசதி இன்மையால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (9-315)

## தீவிரவாதம் இலங்கைக்கு எப்படி வந்தது?

# அரசு தன்னை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்

### சிவமோகன் எம்.பி.

இலங்கை நாட்டில் தீவிரவாதம் எப்படி வந்தது என்பது தொடர்பில் அரசு தன்னை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதம் தொடர்பில் ஊடகவியலாளர்களால் நேற்று எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதம் எங்கு இருக்கின்றது என்று எங்களுக்கு தெரியாமல் தான் இருந்தது. இன்று ஒரு சிறிய தீவில் அமைதியைக் குலைத்துக் கொண்டு இருக்கிறது. இந்தத் தாக்குதலை வன்மையாக கண்டிக்கும் அதே வேளை, ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதம் எவ்வாறு இங்கு கொண்டு வரப்பட்டது என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும். இளைஞர்களிடையே ஏற்படுத்தப்படும் பாதிப்புகள் குறித்து அதாவது அரச இயந்திரம் இளைஞர்கள் மீது நடத்துகின்ற அடக்கு முறையின் வெளிப்பாடே இளைஞர்களின் தற்கொலை தாக்குதல்கள். எனவே இது குறித்து கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கம் தன்னைமீளும் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

வவுணதீவில் பொலிஸாரை கொலை செய்ததாக முன்னாள் போராளிகளை கைது செய்து ஒரு மாவீரர் தினத்துடன் தொடர்புபடுத்தி அவர்கள் தான் செய்தார்கள் என முடிவெடுத்து தாங்களே கதைகளைக் கட்டி அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்திருந்தார்கள். ஆனால் இன்று கதை மாறிக் கொண்டு வருகின்றது. அவர்கள் உண்மையான குற்றவாளிகள் இல்லையென்பது தெரியவந்து கொண்டிருக்கின்றது. தற்போது உண்மை தெரிய வந்துள்ளதென்றால் அன்று இந்த அரசு பாரிய பிழையை விட்டுள்ளது. அந்த பிழையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த சம்பவத்தை சரியாக விசாரித்து உண்மையை கண்டுபிடித்திருந்தால் இன்று இந்த தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றிருக்காது. எனவே ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதம் தன்னாட்டிலுள்ளே வர எப்பொழுது, எது நடந்தாலும் தமிழ் மக்கள் மீது பழியை போடும் நிலையே காணப்படுகிறது என மேலும் தெரிவித்தார். (9-250)

# கஞ்சா வைத்திருந்து தண்டனை பெற்றவர்

## ஹெரோயினுடன் கைது

(குருமன்காடு)

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றா தண்டனை பெற்றவர் மீண்டும் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் இரவு பண்டாரிக்குளம் பகுதியில் சென்ற நபர் ஒருவரை சோதனைக்குட்படுத்திய போது அவரது உடைமையிலிருந்து ஒரு கிராம் 240 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளனர்.

குறித்த நபர் பண்டாரிக்குளம் பகுதியிலுள்ள பாடசாலைக்கு முன்பாக உள்ள வியாபார நிலையத்தில் வைத்து கடந்த மாதம் கேரளக் கஞ்சா பொதியுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத் தண்டனை பெற்றுள்ளார் என்பது பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட குறித்த நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (9-250)

## தமிழர்களின் போராட்டம்
# மக்களின் விடுதலைக்கானது
## பல தரப்பினரும் இப்போது உணருகின்றனர்
## செல்வம் எம்.பி

தமிழ் மக்களின் போராட்டம் மக்களின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதை பல தரப்பினரும் இன்று ஏற்றுக்கொண்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ரெலோவின் முன்னாள் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் கிறிஸ்ரி குகராஜாவின் 20 ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா வைரவர் புளியங்குளத்தில் அமைந்துள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போதைய பயங்கரவாதம் எமது மக்களை கடுமையாக பாதித்துள்ளது. தமிழர் பகுதிகளிலே இராணுவ சோதனை சாவடிகள் பல அமைக்கப்பட்டுள்ளன. மக்களை அச்சத்திற்குள் வைத்திருக்கும் சூழல் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனை 2009 இற்கு முற்பட்ட போருடனான காலத்துடன் ஒப்பிட முடியும். சோதனை செய்வது தவறில்லை. ஆனால் அது கெடுபிடியாக மாறக்கூடாது. அத்துடன் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களையும் பயங்கரவாதிகளாக பார்கின்ற ஒரு நிலைமை தற்போது காணப்படுகின்றது. அது நிறுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்கள் மீது தொடர்ந்து அடக்குமுறைகளை பிரயோகிக்கும் போது அவர்களின் நிலையில் மாற்றம் ஏற்படும். அது மீண்டும் அந்த பயங்கரவாதிகளுடன் இணைந்தால் என்னவென்று எண்ணும் சூழலை அவர்களிடத்தில் உருவாக்கிவிடும். எனவே அந்தச் சூழலை ஏற்படுத்திவிடக்கூடாது.

எனவே சிங்கள மக்களாக இருந்தாலும் சரி தமிழ் மக்களாக இருந்தாலும் சரி அவர்களை தாக்குகின்ற நிலையிலே இருந்து மாறவேண்டும். பொதுமக்கள் தமது கருமங்களை அமைதியான முறையில் ஆற்றவேண்டும். அனைத்து மக்களும் இந்த விடயத்தில் நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மக்களை நிர்க்கதிக்குள் தள்ளுகின்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டு ஜனாதிபதி சீனாவிற்குச் சென்றுள்ளார். அவர் சென்றவுடன் இங்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான நேரத்தில் நாட்டிலிருந்து அதனை தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதே அரச தலைவரின் கடமையாக இருக்கவேண்டும்.

இந்த பிரச்சினையை அரசியலாக்க யாரும் முனையக்கூடாது. இன்று ஊடகங்கள் தமது பணியை மிகச் சிறப்பாக செய்து வருகின்ற நிலையில் அவர்களுக்கு சேறுபூசும் நடவடிக்கைகளை சிலர் மேற்கொள்கின்றார்கள். அது கண்டிக்கப்படவேண்டியது. போராட்ட காலங்களில் பல்வேறு விடயங்களை ஊடகங்களே வெளிக்கொணர்ந்திருந்தன என மேலும் தெரிவித்தார்.

றிசாத் பதியுதீன் மீது முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு வழங்குவீர்களா? எனக் கேட்டபோது அவர் குற்றவாளியாக கருதப்படுகின்ற பட்சத்திலே அதனை நாம் பரிசீலிக்க முடியும். இந்த விடயத்தில் நாம் உடனடியாக பதில் சொல்ல முடியாது எனவும் தெரிவித்தார். (9-250)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் சோதனை



(கண்டாவளை)

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் நேற்றுக்காலை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர். எதிர்வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கவுள்ளதால் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டமைக்கு அமைவாக மேற்படி சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த சோதனை நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி படைத்தலைமையகத்தின் கீழ் 450 இராணுவத்தினர் மற்றும் 90 பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். (9-312-315)

## கட்டடத் திறப்பு விழா

பூநகரி பல்லவராயன் கட்டு குமிழமுனைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை கட்டடத்திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அ.ஞானசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்ணேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கிருஷா பத்மநாதன், முழங்காவில் ம.வி. அதிபர் ப.ஆனந்தராசா உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் தேசிய ரீதியில் விருது பெற்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (9-84)

# தொடரும் இந்திய மீனவர் அத்துமீறல்;
## முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு கடற்பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில்களால் தமது தொழில்கள் பாதிக்கப்படுவதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இயற்கை அனர்த்தம் மற்றும் போர்ச்சூழல் காலத்திலும் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு மீள்குடியேறியுள்ள முல்லைத்தீவு மீனவர்கள் பெரும் போராட்டத்தின் மத்தியில் தற்போது தமது வாழ்வாதாரத்தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது வெளிமாவட்ட மீனவர்களின் வருகையும் இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கையும் தமது தொழில்களை முழுமையாகப்பாதித்துள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற கடற்றொழிலாளர்கள் தற்போது இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கையால் தமது தொழில்கள் முழுமையாகப் பாதிக்கப்படுவதாகவும் இதனால் கடற்றொழிலை விட்டு வேறு தொழிலை நாட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அதிகளவான பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் இந்தப் பிரதேசத்தில் கடற்றொழிலை நம்பி வாழ்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது ஆழ்கடல் தொழிலுக்குச் சென்று வரும் தொழிலாளர்களின் வாடிகளில் வலைகளைத் துப்புரவு செய்தல், மீன்களைப்பிரித்தெடுத்தல், போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து அதன்மூலம் கிடைக்கின்ற வருமானத்தை வைத்தே தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதாகவும் இவ்வாறு இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் தமக்கும் தொழில் இழக்கப்பட்டுள்ளதாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (9-315)




## முள்ளிவாய்க்கால் 10 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி

இறுதி யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளுக்கான 10 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்தில் யாழ்.மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தலைவர் அருட்பணி மங்களராஜா தலைமையில் நடைபெறும் என்பதனை முல்லை.மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்பணி S.A ஜோர்ஜ் தெரிவித்துள்ளார். (9-281)

## மீன்பிடி உபகரண விற்பனை நிலையம் திறப்பு



மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம் திறப்பு விழா நேற்றுக் காலை மன்னாரில் இடம்பெற்றது.

குறித்த மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையத்தினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மீன்பிடி உபகரணங்களும் மீனவ சங்கங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் நீண்டகாலமாக கடமையாற்றி ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஏ.செபமாலை மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு
## விசேட கவனம் தேவை என மன்னார் பிரதேச சபையில் தீர்மானம்

(மன்னார்)

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள ஒரு கம்பனிக்கு அதே இடத்தில் நான்கு விதமான தொழிற்சாலைகளுக்கான அனுமதி வழங்கியிருப்பதால் அப் பகுதியில் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதுடன் இப் பகுதியால் போக்குவரத்து செய்யும்போது துர்நாற்றத்துக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச சபையின் 14 ஆவது மாதாந்தக் கூட்டம் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோதே மேற்படி பிரச்சினை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் துள்ளுக்குடியிருப்பு நடுக்குடா பகுதியிலுள்ள வீதியோரத்தில் தனியார் நிறுவனம் ஒன்று நண்டு பதனிடுதல், ரின் மீன் அடைத்தல், கோழித்தீன் உற்பத்தி செய்தல் மற்றும் ஐஸ் உற்பத்தி செய்தல் ஆகிய நான்கு தொழிற்சாலைகளை இயக்கி வருகிறது.

குறித்த தொழிற்சாலைகளினால் சுற்றாடலுக்கு மட்டுமல்லாமல் குறித்த வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக முறையிட்டுள்ளது.

எனவே குறித்த பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இந்தச் சபைக்கு இருப்பதனால் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் இந்த தொழிற்சாலைகள் இங்கு அமைக்கப்பட்ட பின் இப் பகுதியிலுள்ள காடுகளும் அழிக்கப்பட்டு வருகின்றன. அதாவது இங்கு காடுகளிலுள்ள மரங்கள் எல்லாம் நாளாந்தம் இந்த தொழிற்சாலையின் தேவைக்காக வெட்டப்பட்டு வருவதால் இப் பகுதி மக்கள் நாளாந்தம் காய்ந்த விறகுகளையே பெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என இக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (9-285)

## வீதி புனரமைப்பு

(கண்டாவளை)

பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மாசார் முருகந்தகர் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதி மக்களின் தொடர்ச்சியான வேண்டுகோளைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினருக்கு வட்டார உறுப்பினர் அருட்செல்வி தெரியப்படுத்தியதன் அடிப்படையில் ரூபாய் இரண்டு மில்லியன் நிதியை பாராளுமன்ற உறுப்பினர் வழங்கியிருந்தார்.

குறித்த வீதிக்குரிய அடிக்கல்லை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் நாட்டி வைத்தார் இந்நிகழ்வில் உபதவிசாளர் கஜன், உறுப்பினர் அருட்செல்வி மற்றும் கோகுல், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதர்சினி, கிராம அமைப்பு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (9-315)

பாரதம்

# தமிழீழ விடுதலையை பா.ஜ.க. அரசால் தடுக்க முடியாது

## வேல்முருகன் திட்டவட்டம்



தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கு எதிரான தடையை இந் திய அரசு 5 ஆண்டுகளுக்கு நீடித்துள்ள நிலையில், தமிழீழ விடுதலையை பா.ஜ.க அரசால் தடுத்திட முடியாது என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலை வர் வேல்முருகன் தெரிவித்து ள்ளார்.

இந்த செயல் மூலம் பாரதீய ஜனதாக் கட்சி மனித விடுத லைக்கு எதிரான கட்சி என்பதை நிரூபித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து நேற்றைய தினம் அறிக்கையொன்றை வெளி யிட்டுள்ள அவர், இந்தியாவின் இறையாண்மை மற்றும் மக்க ளின் பாதுகாப்பிற்கு எதிராக விடுதலைப்புலிகள் செயற்படுவ தாகவும், தமிழகத்தில் விடுத லைப்புலிகளுக்கான ஆதரவைப் பெருக்கும் முயற்சியில் சிலர் தொடர்ந்து செயற்பட்டு வருவ தாகவும், இந்திய உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டியே இவ்விடயத்தை தெரிவித்துள்ளார். (7)

# மீண்டும் நானே பிரதமராக வருவேன்

## மோடி நம்பிக்கை!

இந்திய நாடாளுமன்றத் தேர் தல் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் மீண்டும் நானே பிரதமராக வருவேன் என பிரத மர் நரேந்திர மோடி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பீகார் மாநிலத்தில் மேற்கொள் ளும் கடைசிக்கூட்டம் இதுவாகும் என தெரிவித்த மோடி, என்னு டைய அடுத்த ஆட்சியில் புதிய வளர்ச்சித் திட்டங்களுடன் உங் களை சந்திப்பேன் என்றும் தெரி வித்துள்ளார்.

பீகார் மாநிலம் பாடலிபுத்ரா வில் மேற்கொண்ட தேர்தல் பிரசார நடவடிக்கையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார். மக்களின் அன்பே வெற்றியின் மீதான நம்பிக் கையை ஏற்படுத்தியுள்ளதென் றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நாடாளுமன்ற தேர் தல் ஏழு கட்டங்களாக நடைபெ றும் நிலையில், எதிர்வரும் 23 ஆம் திகதி வாக்குகள் எண்ண ப்பட்டு அன்றைய தினமே முடிவு



கள் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# வடகொரியாவில் கடும் வரட்சி



வடகொரியா கடுமையான வரட்சியின் காரணமாக பாதிக்கப் பட்டுள்ளது. மேலும், வடகொரி யாவில் கடந்த 37 ஆண்டுகளில் இடம்பெற்ற மிக மோசமான வரட்சி இதுவே என அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

10 மில்லியன் உணவு வட கொரிய மக்களுக்கு தேவைப்படுகி ன்றது என ஐ.நா தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வடகொரியா மக்கள் இந்த ஆண்டு நாள் ஒன் றுக்கு சுமார் 300 கிராம் உணவை உட்கொள்கிறார்கள் என தக வல்கள் வெளியாகியுள்ளன.

வரட்சி காரணமாக உணவு இல்லாமல் 1990 ஆம் ஆண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர்.

கடுமையான வரட்சி கார ணமாக வடகொரியாவில் விளை ச்சல் நிலங்கள் பாதிக்கப்பட்டதால் உற்பத்தி குறைந்துள்ளது. இந் நிலையில், மக்களுக்கு தேவை யான 1.5 மில்லியன் தொன் உணவுகளை வெளிநாட்டிலி ருந்து இறக்குமதி செய்யவேண் டிய நிலை ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# மாலி எல்லையில் தாக்குதல் 28 இராணுவத்தினர் மரணம்!

(பமாகோ)

மாலி எல்லைப்பகுதி அருகே தீவிரவாதிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் நிகர் படையினர் 28 பேர் உயிரிழந் தனர்.

நேற்று வியாழக்கிழமை உறுதிப்படுத்திய இராணுவ செய்தித் தொடர்பாளர் இந்த சம்பவத்தை அடுத்து 11 இராணுவத்தினரை காணவில்லை என்றும் தெரி வித்துள்ளார்.

டொங்கோ டொங்கோவின் மேற்குப் பகுதியில் ஐ.எஸ். உட்பட பல ஜிகாத் குழுக்கள் தீவிரமாக செயற்படும் பகுதியில் வைத்தே இந்த தாக்குதலை நடத்தப்பட் டுள்ளது. (7)

# ஐ.எஸ். பயங்கரவா தெற்காசிய கிளைக்

## ஐ.நா. பாதுகாப்பு சபை அதிரடி

(நியூயோர்க்)

**தெற்காசிய நாடுகளில் தலைதூக்கி வருவதாக நம்பப்ப டும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் கிளைக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை நேற்று தடை விதித்துள்ளது.**

மத்திய கிழக்கு ஆசியாவில், சிரியா அரசுப்படைகளை எதிர் த்து போர் புரிந்த அல்நுஸ்ரா முன் னணி என்கிற அமைப்பும், அல் கொய்தாவின் ஈராக் பிரிவும் ஒன்றிணைந்து 'ஐ.எஸ்.ஐ.எஸ்' என்கிற புதிய அமைப்பை உரு வாக்கின.

2013 ஆம் ஆண்டின் இறு திக் கட்டத்தில் வலுப்பெற்ற இந்த அமைப்பு, தெற்கு சிரியாவின் பெரும்பகுதிகளை தன் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தது. 2014 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஈராக்கிற்குள் நுழைந்த ஐ.எஸ் பயங்கரவாதிகள் பலுஜா, மொசூல் ஆகிய நகரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சுமார் 30 ஆயிரம் வீரர்கள் அந்த இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள்.

ஆனால் ஈராக், சிரியாவில் இதன் ஆதிக்கம் படிப்படியாக கட்டுப்படுத்தப்பட்டது. இதை தொடர்ந்து இவர்கள் உலகம் முழுவதும் தங்கள் அமைப்பை ஏற்படுத்தும் இரகசிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தனர்.

அண்மையில் நிகழ்ந்த இலங்கை பயங்கர வாதத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது. இந்தத் தாக்குதலில் 250க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்தியாவில் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு மாநிலத்தையே நிறுவியுள்ளதாக ஐ.எஸ். அமைப்பி னர் தெரிவித்திருந்தனர். இது இந்தியாவின் பாது காப்பு தொடர்பான விடயத்தில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 2015 ஆம் ஆண்டில் தெஹ்ரிக்-இ-தலிபான் தலைவர் ஐ.எஸ்.ஐ.எஸ். நிறுவனரும் தலைவருமான அபுபக்கர் பக்தாதிக்கு செய்துதந்த சத்தியத்தின்படி, பின்னர் தலிபான் இயக்கங்களில் இருந்து பிரிந்துவந்த பயங்கர

# கணனி வலையமைப் அவசரநிலைப்

## அமெரிக்க ஜனாதிபதி அ

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கணனி வலையமைப்பை பாதுகாப்பதற் காக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அவசர நிலையை பிரக டனப்படுத்தியுள்ளார்.

வெளிநாடுகளின் வலைய மைப்புகள் அமெரிக்க கணனி வலையமைப்பில் ஊடுருவு வதை தடுக்கும் வகையில் இந்த அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

குறித்த அவசர நிலையின் கீழ், வெளிநாட்டு தொலைத் தொடர்பு வலையமைப்புகளை



# அமெரிக்கப் பணியாளர் நாட்டுக்கு திரும்ப வேண்

## ஈராக்கின் அமெரிக்க தூதரகம் உ

ஈராக்கில் பணிபுரியும் அமெரிக்க பணியாளர் களை உடனடியாக அமெரிக்காவுக்கு திரும்பி செல்லுமாறு ஈராக்கின் அமெரிக்க தூதரகம் உத்தரவிட்டுள்ளது. ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் அதிகரித்து வரும் பதற்றங்களை கருத்திற் கொண்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பக்தாத் இல் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் ஏர்பில் இல் உள்ள இணைத் தூதரகம் ஆகிய இரண்டு இடங்களிலும் பணிபுரி களை நாடு திரும்புமாறு அமெரி துறை அமைச்சு ஆணையிட்டுள் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறி

ஈராக்கில் வாழும் அமெரிக்கர் க்க நலன்விரும்பிகளையும் ஈரான அதன் ஆதரவாளர்களும் இலக்கு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட

# வெளிநாடு

# வாத இயக்கத்தின் ளக்கு தடைவிதிப்பு

ரடி

ப்பய
ளக்கு
து.

ஆதிக்கம்
தொடர்ந்து
அமைப்பை
ஈடுபட்டு

க பயங்கர
அமைப்பு
தாக்குதலில்
ர்.
ன் கீழ் ஒரு
. அமைப்பி
ாவின் பாது
அதிர்ச்சியை

ஆண்டில்
ஸ்.ஐ.எஸ்.
பக்தாதிக்கு
தலிபான்
த பயங்கர



வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து பயங்கரவாதி ஹபீஸ் சையித் தலைமையில் தெற்காசியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தை பரப்ப உறுதி ஏற்றதாக அமெரிக்க உளவுத்துறை நம்புகிறது.

தெற்காசியாவிலுள்ள முக்கிய நாடுகளில் காலூன்ற நினைக்கும் இந்த அமைப்புக்கு 'ஐ.எஸ். ஐ.எஸ். கோராசான்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ் இ முஹம்மத் அமைப்பின் தலைவனான பயங்கரவாதி ஹபீஸ் சயீதை சர்வதேச பயங்கரவாதியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை அறிவித்தது.

இதைத்தொடர்ந்து, தெற்காசிய நாடுகளில் தலைதூக்கி வருவதாக நம்பப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் கிளைக்கு ஐ.நா. பாதுகாப்பு சபை நேற்று தடை விதித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்களின் மூலம் சுமார் 150 பேர் உயிரிழப்புக்கு காரணமாக இருந்ததால் இந்த அமைப்புக்கு சர்வதேச தடை விதிக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது. (7)

# வைரஸ் காய்ச்சலால் 17 பேர் உயிரிழப்பு

(அடிலெய்ட்)

பருவகால மாற்றத்தின் விளைவாக பரவும் வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தெற்கு அவுஸ்திரேலியாவில் இந்த வருடம் மாத்திரம் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் தெற்கு அவுஸ்திரேலியாவில் (flu) பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக மருத்துவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் கடந்த 2018 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட 12 ஆயிரத்து 339 பேரில் 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் இதனை விட இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த வருடத்தை விட இந்த வருடம் 1328 அதிகம் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் தெற்கு அவுஸ்திரேலியாவில் முதியோர் இல்லங்களில் உள்ளவர்கள் மிக அதிக எண்ணிக்கையில் இந்த காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்தவகையில் இதுவரை ஏறக்குறைய நான்கரை இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# 100 அடி உயரத்திலிருந்து விழுந்த ஐந்து வயது சிறுமி



ஐந்து வயதான சிறுமி ஒருவர் தூக்கத்தில் 100 அடி உயரத்திலிருந்து விழுந்த சம்பவம் தாய்லாந்து ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் நிகழ்வொன்றிற்காக தாய்லாந்து ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது, குறித்த சிறுமி தூக்கத்தில் இரவு நேரத்தில் நடந்து சென்றபோது அறையின் கதவுகள் மூடியிருந்தமையால் செல்ல வழியில்லாமல் தவறுதலாக வீழ்ந்த காட்சிகள் சி.சி.டி. கமராவில் பதிவாகியுள்ளன.

குறித்த ஹோட்டலுக்கு அம்புலன்ஸை வரவழைத்து சிறுமியை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (7)

# மைப்பை பாதுகாக்க லப் பிரகடனம்

## தி அறிவிப்பு



அமெரிக்கா பயன்படுத்த முடியாது. இதுதொடர்பான பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ள ட்ரம்ப், நாட்டின் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அமெரிக்காவில் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு தொலைத்தொடர்பு வலையமைப்பு நிறுவனங்கள் தொடர்பாக எவ்வித தகவலையும் தெரிவிக்காத நிலையில், சீனாவின் மிகப்பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ஹுவாவியை இலக்குவைத்தே இந்த அவசர நிலை தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஹுவாவி வலையமைப்பை பயன்படுத்தி உலக நாடுகளை உளவுபார்க்கும் நடவடிக்கையை சீனா மேற்கொள்ள சாத்தியம் காணப்படுவதாக அமெரிக்கா மற்றும் அதன் ஆதரவு நாடுகள் அண்மைக் காலமாக தெரிவித்து வந்தன. அதன் தொடர்ச்சியாக அமெரிக்காவில் தற்போது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தமது உற்பத்திகளுக்கு தடைவிதிப்பதும் கட்டுப்பாடு விதிப்பதும் அமெரிக்க பயனாளர்கள் மற்றும் நிறுவனங்களையே பாதிக்குமென ஹுவாவி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ளர்கள் வண்டும்

## ம் உத்தரவு

ும் பணிபுரியும் அமெரிக்கர்
ாறு அமெரிக்க வெளியுறவுத்
ணையிட்டுள்ளதாக தூதரகம்
கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அமெரிக்கர்களையும் அமெரி
ளயும் ஈரானும் ஈராக்கிலுள்ள
நம் இலக்கு வைத்துள்ளதாக
தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)



# ரம்ழான் நோன்புக்காலத்தில் பொது இடத்தில் உணவு உண்ட 80 பேர் பொலிஸாரால் கைது

## எச்சரித்து விடுவிப்பு




(அபுஜா)

இஸ்லாமிய சட்டத்திட்டங்களுக்கு உட்பட ஆட்சி நடைபெற்று வரும் நைஜீரியாவின் கானோ மாநிலத்தில் ரம்ழான் நோன்பு காலத்தில் பொது இடத்தில் உணவு சாப்பிட்டதாக 80 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

மேற்காபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவில் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் சமஅளவில் வாழ்கின்றனர். நாட்டின் வடபகுதியில் உள்ள சில மாநிலங்களில் மட்டும் இஸ்லாமிய 'ஷரியத்' சட்டத்திட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சி நடைபெற்று வருகிறது. 'ஷரியத்' சட்டத்திட்டங்களை மீறிய வகையில் செயற்படுபவர்களை கண்டுபிடித்து தண்டிக்க 'ஹிஸ்பா' எனப்படும் பொலிஸ் படையினர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கானோ மாநிலத்தில் ரம்ழான் நோன்பு காலத்தில் பொது இடத்தில் உணவு சாப்பிட்டதாக 80 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

முதல்முறை கைதானவர்கள் என்பதால் அவர்கள் சிறையில் அடைக்கப்படவில்லை. மீண்டும் இதுபோல் செய்து பிடிபட்டால் வழக்கு தொடர்ந்து சிறையில் அடைக்கப்படுவீர்கள் என 'ஹிஸ்பா' பொலிஸார் அவர்களை எச்சரித்து அனுப்பி வைத்தனர். (7)

## ஐ.எஸ்ஸின் பயிற்சி முகாமாக மட்டு.வளாகம்

# அடிப்படைவாதத்தைப் போதிக்கும் கல்வி நிறுவனம் தேவையில்லை

## மதகுருமார்,பல்கலை. விரிவுரையாளர்கள் எதிர்ப்பு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் மட்டக்களப்பு வளாகம் மதத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றதே தவிர, அது நாட்டின் தேசிய கல்வித்திட்டத்திற்கு அமைவாக செயற்படவில்லை. இவ்வாறான அடிப்படைவாதத்தைப் போதிக்கும் கல்வி நிறுவனங்கள் எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை என்பதுடன் அவை அவசியமானவையும் அல்ல.

எனவே மீட்டக்களப்பு வளாகத்தை கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைத்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டங்களை உள்வாங்குவதே இதற்கான சிறந்த தீர்வாக அமையும் என்று மத குருமார் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தில் மத குருமார் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இணைந்து "அடிப்படைவாதக் கல்வியைப் புறக்கணிப்பதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம்" என்ற தொனிப் பொருளில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இச்சந்திப்பில் பாஹியன்கல ஆனந்த சாகர தேரர், தர்ஷக ஷர்மா, பேராசிரியர் ஜன்ன ஜயசுமன, சிரேஷ்ட விரிவுரையாளர் லலித சிறி குணருவன், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வசந்த அல்விஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், மட்டக்களப்பு வளாகம் எனப்படுகின்ற கல்வி நிறுவனத்தின் ஊடாக உண்மையில் என்ன போதிக்கப்படுகின்றது என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதங்களைக் கையில் எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட ஒருவர்தான் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அவரது அலுவலகத்திலிருந்து பல ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவராலேயே இந்த மட்டக்களப்பு வளாகத்திற்கான அனுமதி முறையற்ற விதத்தில் பெறப்பட்டுள்ளது.

ஹிஸ்புல்லா மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோருக்கு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புள்ளது. அவர்கள் குண்டுதாரிகளுக்கு அடைக்கலம் வழங்கியிருக்கிறார்கள். அதே போன்று இந்த மட்டக்களப்பு வளாகமும் ஐ.எஸ்.ஐ.எஸ். போராளிகளுக்கு பயிற்சி வழங்கும் வகையில் செயற்பட்டிருக்கும் என்ற சந்தேகம் எழுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# வன்முறைகளின் பின்புலத்தில் திட்டமிட்ட அரசியல் நிகழ்ச்சி

## ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**வடமேல் மாகாணத்தில் நடத்தப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களின் பின்புலத்தில் தெளிவாகத் திட்டமிடப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று உள்ளதாக தெரிவித்த ஜாதிக ஹெல உறுமய, கைது செய்யப்பட்டவர்களின் பின்புலத்தை வைத்து வன்முறைச் சம்பவங்களுக்கு யார் காரணமென மக்கள் புரிந்து கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.**

நாட்டில் பாதுகாப்பற்ற சூழல் காணப்படுவதாக மக்களைத் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி களேபரங்களை தோற்றுவித்து அதன்மூலம் அரசியல் இலாபங்களை அடைவதே இவர்களின் இலக்காகவுள்ளது என்றும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பிரதி அமைச்சருமான கருணாரத்ன பரணவிதான மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு என இன்னமும் ஒருவரை ஒருவர் கைநீட்டிக் கொண்டுள்ளனர். அடிப்படைவாதத்தை ஒழிக்க ஒரு முறையான பொறிமுறையொன்று வகுக்கப்பட வேண்டும்.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள சூழலில் வடமேல் மாகாணத்தின் பல இடங்களிலும் மினுவாங்கொட நகரிலும் வன்முறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த 21 ஆம் திகதிக்குப் பின்னர் அரசாங்கமும் மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து நாட்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திரு[illegible]னர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெடிபொருட்களை ஒப்படைப்பதற்கான கால எல்லை 20 ஆம் திகதி வரை நீடிப்பு

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு



(கொழும்பு)

அனுமதிப்பத்திரமற்ற அல்லது சட்டவிரோத வெடி பொருட்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைப்பதற்கான கால எல்லை இம் மாதம் 20 ஆம் திகதி காலை 6.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியின் பின்னர் இவற்றைக் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதில் அனுமதிப்பத்திரமற்ற அல்லது வேறு வகையில் வெடி பொருட்களை வைத்திருப்போர் தொடர்பாகவும் அவர்கள் இருக்கும் இடங்கள் குறித்தும் அருகில் உள்ள பொலிஸ் நிலைய அதிகாரிக்கு அறிவிக்க முடியும்.

இதற்கான அறிவுறுத்தல்கள் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நேர்மை

ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு நெசவாளர். மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருந்தார். அவர் என்ன செய்வார் என்றால் தினமும் தானே கையால் நூல் நூற்று நெசவு செய்வார். துணிகளை தயார் செய்வார். அதையெல்லாம் போட்டுக் கொண்டு தெருத் தெருவாக போய் விற்பனை செய்வார்.

அதனால் வரக்கூடிய சொற்ப வருமானத்தை வைத்துக் கொண்டு அவர் வாழ்க்கை நடத்திக் கொண்டு இருந்தார்.

அவர் ஒரு நாள் பாலைவனப் பகுதி வழியாகப் போய்க் கொண்டு இருந்தார். அவருடன் இன்னும் இரண்டு நண்பர்களும் போய்க் கொண்டு இருந்தார்கள். வழியிலே ஒரு ஆள் பேரீச்சம்பழம் விற்றுக் கொண்டிருந்தான். என்ன விலை என்று விசாரித்தார்.

ஒரு ரூபாவிற்குப் பத்துப் பழம் என்றான் அவன்.

சரி! ஒரு ரூபாவிற்கு பழம் கொடு! அப்படியே சருகில் வைத்து கட்டிக் கொடு. வழியில் சாப்பிட்டு கொள்கின்றோம்! என்றார் அந்தப் பெரியவர்.

அதேபோன்று அந்த ஆளும் உலர்ந்த சருகிலே பழத்தை வைத்துக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்டு இவரும் மற்ற இரண்டு பேரும் சென்று கொண்டிருந்தார்கள். தண்ணீர் கிடைக்கின்ற இடமாகப் பார்த்து உட்கார்ந்து பழத்தைச் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டே சென்றார்கள். வழியில் ஒரு நீர் நிலை தெரிந்தது. அங்கே போய் மூன்று பேரும் உட்கார்ந்தார்கள். பெரியவர் பொட்டலத்தை பிரித்தார். பதினொரு பழங்கள் இருந்தன. ஒரு பழம் அதிகமாக இருந்தது.

அதைப் பார்த்தவுடன் பெரியவர் பதறிப் போய் விட்டார். ஒரு காசிற்கு 10 பழம் தானே. கை தவறுதலாக அந்தப் பழ வியாபாரி ஒரு பழம் கூட வைத்து விட்டாரே! இது அவருக்கு நட்டமாயிற்றே! இப்ப என்ன செய்வது? என்று யோசித்தார்.

சரி... திரும்பப் போய் அந்த வியாபாரியை சந்தித்து இந்த ஒரு பழத்தை கொடுத்து விட்டு வந்து விடுவோம் என்று புறப்பட்டார். பக்கத்தில் இருந்த நண்பர்கள் சிரித்தார்கள்.

என்ன இது? வேடிக்கையாக இருக்கின்றது. ஒரே ஒரு பேரீச்சம் பழத்தை திருப்பிக் கொடுப்பதற்காக திரும்பவும் நீண்ட தூரம் திரும்பி நடக்க வேண்டுமா? இது தேவைதானா? என்றார்கள். பெரியவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

வியாபாரத்தில் நாம் காசு கொடுத்து அதற்குச் சரியாக ஒரு பொருளை வாங்க வேண்டும். அதுதான் நியாயம். அதிகப்படியாக எது கொடுத்தாலும் அது விலக்கப்பட்ட பொருள். அது நம்மை சேரக்கூடாது என்று செல்லிவிட்டு நே[illegible]க அந்த வியாபாரியைத் தேடிச் சென்றார்.

அந்த ஒரு பழத்தைத் திருப்பிக் கொடுத்தார். ஆனால் அந்த ஆள் என்ன கூறினார் தெரியுமா? ஐயா!அந்த ஒரு பழத்தை நான் தெரியாமல் கொடுத்து விடவில்லை. உங்களின் தோற்றத்தைப் பார்த்ததும் எனக்கு [illegible] கள் மேல் ஒரு மரியாதை ஏற்பட்டது. அதனால் தான் ஒரு பழத்தை அதிகமாக வைத்துக் கொடுத்தேன். பரவாயில்லை வைத்துக் கொள்ளுங்கள்! என்றார்.

ஆனால் இந்தப் பெரியவர் அதற்கு சம்மதிக்கவில்லை. வணிகத்தில் – வியாபாரம் செய்பவர் –வாங்குகின்றவர் ஒருத்தர். விற்கிறவர் ஒருத்தர். இரண்டு பேரும் இவ்வளவுக்கு இவ்வளவு அப்படி என்கின்ற ஒரு உடன்பாட்டிற்கு வருகின்றார்கள். அதன்படி நடக்கின்றார்கள். அது தான் வியாபாரம். அந்த உடன்பாட்டிற்கு ஒத்துப் போவதுதான் நியாயம். நியாயம் தவறி நாம் நடந்து கொள்ளக் கூடாது என்று கூறி விட்டு பழத்தை திருப்பிக் கொடுத்து விட்டார். நேர்மை– நியாயம் இதற்கெல்லாம் இலக்கணம் இந்தப் பெரியவர்.

இந்தக் காலத்திலே எல்லாம் நாம் இப்படியா சேர் நடந்து கொள்கின்றோம். யோசித்துப் பாருங்கள். கொசுறு இல்லை என்றால் இப்ப வியாபாரமே நடப்பதில்லை. அதுமட்டுமல்ல... வாங்குகின்றவர் விற்கின்றவரை எப்படி ஏமாற்றலாம் என்று பார்க்கின்றார்கள். விற்கின்றவர் வாங்குகின்றவரை எப்படி ஏமாற்றுவது என்று பார்க்கின்றார்கள். சாமர்த்தியசாலிகள் பிழைத்துக் கொள்கின்றார்கள்.

ஒருத்தர் அப்படித்தான் மாம்பழம் வாங்கினார். ஒரு பழம் ஒரு ரூபாய் என்றார் கடைக்காரர். 10 ரூபாய்க்கு பழம் கொடுங்கள் என்றார். அவர் பத்து பழம் கொடுத்தார். அடித்துப் பிடித்து ஒரு பழம் அதிகமாக வாங்கி வந்து விட்டார். அதன்பின் பாவம் அந்த கடைக்காரர் என்று மிகவும் வருத்தப்பட்டார்.

நீங்கதானே கட்டாயமாக ஒரு பழம் அதிகமாக வாங்கினீர்கள்...இப்ப நீங்களே வருத்தப்பட்டால் எப்படி? என்றார் வீட்டுக்கார அம்மா.

நான் அதற்காக வருத்தப்படவில்லை. நான் அவரிடம் கொடுத்தது செல்லாத பணம். பாவம் எப்படி அதை மாற்றுவாரோ? என்று நினைத்து வருத்தப்படுகின்றேன் என்றார் இவர்.

இதேநேரத்தில் அந்தக் கடைக்காரரும் கவலைப்பட்டிருந்தார். புளிப்பான பழத்தினை அவர் தலையிலே கட்டி விட்டோமே எப்படித்தான் சாப்பிடப் போகின்றாரோ? என்று நினைத்தார்.

# தனியாரின் காணிப் பிரச்சினைகளும் அவற்றைத் தீர்க்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும்

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் –எல்லை நிர்ணய ஆணைக்குழு
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

05



அப்படியான சந்தர்ப்பத்தில் அபிவிருத்தி செய்த கூட்டுடைமையாளர் அக்குறிப்பிடப்பட்ட இடத்துக்கென முன்னுரிமையை அடையார் என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

ஓர் ஆணையாளரால் உத்தேசிக்கப்பட்டு முன்மொழியப்பட்ட ஒரு பிரிவிடுதல் திட்டம் சிறந்தது என்றும் அத்திட்டத்தை ஆக்கும் போது நேர்மையாகத் தமது நிதானத்தைப் பிரயோகித்திருந்தாலும் அவ்வழக்கு இலேசாகத் தள்ளுபடி செய்யப்படமாட்டாது என்பதை ஆணையாளர் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட பிரிவிடுதல் திட்டத்தில் திருப்தியுறாதவர் தனது செலவில் வேறு ஒரு நில அளவையாளர் மூலம் பிரிவிடல் காணியை அளந்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கலாம். இது நீதிமன்றத்தின் மூலமே நடைபெற வேண்டும். இவர் சமர்ப்பிக்கும் நில அளவைப் படத்தை பரிசீலிப்பதற்கு சகல கட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

> ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட பிரிவிடுதல் திட்டத்தில் திருப்தியுறாதவர் தனது செலவில் வேறு ஒரு நில அளவையாளர் மூலம் பிரிவிடல் காணியை அளந்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கலாம்.

இரு திட்டங்களையும் ஒத்து நோக்கி, நீதிமன்றம் தனிப்பட்ட நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட திட்டம் சிறந்தது என்று கருதினால், ஆணையாளரது திட்டத்தை நீதிமன்றத்தின் பணிப்புகளுக்கிணங்க மாற்றியமைக்கும்படி அவரை நீதிமன்றம் அறிவுறுத்தும். ஆணையாளர் நீதிமன்றத்தின் பணிப்புகளுக்கிசையத் தமது திட்டத்தை மாற்றியமைப்பார். இதுவே பின்பு உறுதிப்படுத்தப்படும்.

பிரிவிடுதல் சட்டம் பிரிவு 32இன்படி திருப்பியனுப்ப வேண்டிய திகதியன்று அல்லது அதற்கு முன்பு, ஆணையாளர் தமது திரட்டைச் சரிபார்த்துச் சத்தியப்படுத்தி ஆணையைத் திருப்பியனுப்புவார். இத் திரட்டுடன் பின்வருவனவும் இணைக்கப்படும்.

○ தம்மால் தயாரிக்கப்பட்ட பிரிவிடுதற்படம்.

○ அத்தாட்சிப்படுத்தப்பட்ட களக்குறிப்புப் பிரதி.

○ பிரிவிடுதல் மாதிரி முதலியவற்றை விளக்கும் அறிக்கை.

○ அதற்கென விதிக்கப்பட்டுள்ள படிவத்தில் பங்கிடுதற் பொழிப்பு

**நட்டஈடும் பெறுமதி சமநிலைப்படுத்தலும் :-**

ஒரு கட்சிக்காரரின் பங்கின் விலைக்குச் சமனாக அவருக்குப் பங்கீடு செய்யப்பட்டுள்ள காணித்துண்டின் பெறுமானம் இருக்காவிட்டால் நாணய பரிவர்த்தனைமூலம் சமனாக்கவேண்டும். அதாவது ஒரு கட்சிக்காரரின் ஆதனப் பங்கின் பெறுமானம் 50000 ரூபாவாக இருந்து அவருக்குக் கொடுக்கப்பட்ட காணித்துண்டின் பெறுமானம் அமைவிடம் இயல்பு காரணமாக ரூபா 40000 மட்டுமானால், ரூபா 10000 பங்கின் நாணயப் பெறுமானத்தை ஈடுசெய்வதற்காக அவருக்கு கொடுக்கவேண்டும். ஒருவர் செய்த செம்மைப்படுத்தலுக்குக் கொடுக்கப்படும் தொகை நட்டஈடாகும்.

நட்டஈடும் பங்கீட்டு வித்தியாசத்தின் நாணயப் பெறுமானமும் ஆணையாளரால் மதிப்பிடப்படும். அவற்றைக் கொடுக்க வேண்டியவர் பெற வேண்டியவர் குறித்தும் அவர் தீர்மானிக்க வேண்டும். பிரிவிடுதல் திட்டம் இதைக் காட்டக்கூடியதாக அமைய வேண்டும்.

> நில அளவையாளர் தப்பான திரட்டை அனுப்பினால் அதாவது அவர் தப்பானது அல்லது தப்பானது என எண்ணக்கூடிய நியாயமான அளவு காரணம் உள்ளது என்று அவருக்குத் தெரிந்த ஒரு திரட்டை அனுப்பினால் அக் குற்றத்தையும் அவர் பெறும் அதற்குரிய தண்டனையும் பிரிவிடுதல் சட்டம் பிரிவு 72 விபரிக்கின்றது.

நீதிமன்றம், ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை ஆராய்ந்து, அதைக் கைக்கொண்டு அல்லது மாற்றியமைத்து இறுதித் தீர்வு சம்பந்தமான கட்டளையைப் பிறப்பிக்கும்.

நில அளவையாளர் தப்பான திரட்டை அனுப்பினால் அதாவது அவர் தப்பானது அல்லது தப்பானது என எண்ணக்கூடிய நியாயமான அளவு காரணம் உள்ளது என்று அவருக்குத்தெரிந்த ஒரு திரட்டை அனுப்பினால் அக் குற்றத்தையும் அவர் பெறும் அதற்குரிய தண்டனையும் பிரிவிடுதல் சட்டம் பிரிவு 72 விபரிக்கின்றது.

**○ இறுதிப் பிரிவிடல் (Final Partition)**

சாதாரண நடைமுறையில் இறுதிப் பிரிவிடல் அளவையானது (**Final Partition Surveys**), பிரிவிடல் சட்டத்தின் பிரிவு 27 (3) இன் பிரகாரம் ஆரம்ப நில அளவையாளரிடமே (ஆணையாளரிடமே) கொடுப்பது வழக்கம். நீதவான் அதனை வேறொரு ஆணையாளரிடம் கொடுப்பதற்கு தீர்மானித்தால் அவ்வாறு கொடுக்க முடியும்.

ஆணையாளர் ஆணையைப் பெறுகையில், அத்னை மிகவும் கவனமாக பலமுறை படித்து, அதில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி நிலத்தின் பிரிவிடலைச் சரியாகச் செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்கையில் ஏதும் திருத்தமிருப்பின் பட்டியலை திருத்தம் செய்யக்கோரி நீதி மன்றத்திற்கு திரும்ப அனுப்ப வேண்டும்.

**○ நில அளவைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் பிரிவிடல் அளவைகள்**

நீதிமன்ற ஆணை அளவைகள் 1977ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க பிரிவிடல் சட்டத்தின் 18(3) பிரிவின் பிரகாரம் மாவட்ட நீதிமன்றத்தால் நில அளவையாளர் நாயகத்துக்கு வழங்கப்படுகின்றன. நீதிமன்ற ஆணை அளவைக்கு உரித்தான எந்தவொரு தரப்பினதும் வேண்டுகோளின்படி அல்லது நீதிமன்றத்தின் பிரேரணைக்கமைய நீதிமன்றக் கட்டளை நில அளவையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் ஆரம்பமாகிறது. அரச காணியொன்று உள்ளடங்கும் அல்லது உள்ளடங்கிலான ஐயம் ஏற்படும். சகல சந்தர்ப்பங்களிலும் அரசின் நலன்களைப் பாதுகாக்க சட்டமா அதிபரும் குழு கட்சிக்காரராவதால் அவ்வேளைகளில் சட்டமா அதிபரின் வேண்டுகோளுக்கமைய நீதிமன்றத்தால் நில அளவையாளர் நாயகத்திடம் நீதிமன்றக் கட்டளைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஒருவரது கிடைப்படத்தையோ புலக்குறிப்புகளையோ நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முன்னர் அவற்றின் பிழையின்மையை உறுதிப்படுத்திக் கொள்ள அல்லது புதிதாய் அளந்து கிடைப்படம், புலக்குறிப்பு மற்றும் அறிக்கை தயாரிக்குமாறு கோரி நில அளவையாளர் நாயகத்திடம் நீதிமன்றக் கட்டளை வழங்க முடியும். நீதிமன்ற ஆணைக்கு அமைவான அளவைகள் அக் கட்டளையில் குறிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இசைவானதாகவே செயற்படுத்தப்படல் வேண்டும்.

கிடைப்படங்கள் A3 அளவிலான தாளில் வரையப்பட வேண்டியதோடு ஒவ்வொரு உத்தரவு பெற்ற நில அளவையாளராலும் தயாரிக்கப்பட்ட கிடைப்படங்களில் எல்லைகளைக் காண்பிக்க ஒன்றோடொன்று மாறுபட்ட வர்ணங்களைப் பாவித்தல் வேண்டும். திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட கிடைப்படங்களில் எல்லைகளைத் தெளிவாகக் காண்பிக்க சிவப்பு நிறத்தைப் பாவிக்க வேண்டும். மேலும் புதிதாய் அளந்த எல்லைகள் இருப்பின் அவை மேற்கூறிய எந்தவொரு எல்லையுடனும் ஒன்று சேராவிடில் அவ்வெல்லைகளைக் கறுப்பில் வரைந்து காண்பிக்க வேண்டியதோடு, பாவிக்கப்படும் வர்ணங்களை நிரல்படுத்தி விபரித்து கிடைப்படத்தில் குறிப்பொன்றை இடவேண்டும். இக் கிடைப்படத்திற்கு மேலதிகமாக நீதிமன்றத்துக்கு ஒப்படைக்கப்பட்ட சுவடுவரை துணிமீதும் அதன் பிரதியொன்றை மேற்கூறிய வர்ணங்களை பாவித்து நிலஅளவையாளரால் தயாரிக்கப்படவேண்டும். உத்தரவு பெற்ற நிலஅளவையாளர்களது கிடைப்படங்களுக்குள் அடங்கும் சகல அரசகாணிகளும் அளக்கப்பட்டு வேறாகக் காணித்துண்டு இலக்கங்கள் இடப்படவேண்டும்.

நீதிமன்றக் கட்டளை சட்டமா அதிபரின் தேவையுடன் தொடர்பான வழக்காகவோ அல்லது குறித்த வழக்கில் சட்டமா அதிபரும் ஒரு தரப்பினராகும் சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்படுவதற்காக கிடைப்படத்தின் மேலதிகப் பிரதியொன்று நில அளவையாளரால் சுவடுவரை துணியில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பங்களில் அத்துணியிலான சுவடுவரைதலுடன் காணித்துண்டு அட்டவணையினையும், நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

பிரிவிடல் வழக்கில் 60 ஆம் பிரிவு முக்கியமானது. இதன் கீழ் ஒருவர் தனது உரிமையை நிரூபிக்க தவறினால் நீதிமன்றம் இன்னுமொரு கட்சிக்காரரிடம் அவரது உரிமையை நிரூபிக்குமாறு கேட்கலாம். வழக்கை முடிவுக்குக்கொண்டு வர இது உதவுகிறது.

குறிப்பு:- பல சந்தர்ப்பங்களில் இறுதி மரணசாதனம் எழுதுபவர் அதனை எழுதிவைக்கும்போது காணியை எழுத்து மூலமான பிரிவிடல் செய்து எழுதிவைத்திருப்பார். உதாரணமாக ஒருவர் தனது காணியை பிள்ளைகளுக்கு பிரிக்கும் முறை பற்றி மரணசாதனத்தில் தெளிவாகக் (வடக்குப் பக்கம் ஒருவருக்கு, தெற்குப் பக்கம் மற்றவருக்கு என்பது போன்று) குறிப்பிட்டிருந்தால் அதனைச் சொரியல் பங்கு எனக் கருதப்படுவதில்லை. இக் காணியை பிரிவிடல் வழக்கு இல்லாமலே நிலஅளவையாளரின் உதவியுடன் பிரிவிடல் செய்து கொள்ளலாம்.

**○ பிரிவிடல் வழக்கும் கூட்டுச் சொந்தமும்**

ஒருவர் நீதிமன்றத்தில் பிரிவிடல் வழக்குத்தாக்கல் செய்து, தாம் பல வருடகாலம் அக்காணியில் ஏனைய கூட்டுச் சொந்தக்காரரை விட கூடுதலாக அக்காணியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாக நிரூபித்தாலும் அவருக்கு அக்காணியின் உரிமை ஆட்சியுரிமைச் சட்டத்தின் கீழ் கவனிக்கப்படமாட்டாது. அவருக்கு அவருடைய பங்கு மட்டுமே கிடைக்கும்.

> கூட்டுச் சொந்தக் காணியில், ஒரு கூட்டுச் சொந்தக்காரர், ஒரு குறித்த பகுதியை 10 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்து வந்தால் அப்பகுதியை நீதிமன்றம் மூலம் பெறமுடியும்.

ஆனால் கூட்டுச் சொந்தக் காணியில், ஒரு கூட்டுச் சொந்தக்காரர், ஒரு குறித்த பகுதியை 10 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்து வருவதாகவும் அப்பகுதியை தனது காணியாக தர வேண்டுமென்று நீதிமன்றத்தைக் கேட்க வேண்டுமானால் அவர் நீதிமன்றத்திற்கு ஒரு கோரிக்கையை விடவேண்டும்.

கூட்டுச் சொந்தக்காரரின் வேண்டுகோளின்படி பிரிவிடல் வழக்கு நடைபெற்றால் அதனை அளப்பதற்கு நீதிமன்றம் ஒரு நில அளவையாளரை நீதிமன்ற ஆணையாளராக நியமித்து அக்காணியின் ஆரம்ப நில அளவையைச் செய்யுமாறு கேட்கும்.

அவர் ஆரம்ப நிலஅளவையைச் செய்ய வரும் போது ஒரு பகுதியை தான் மட்டும்தான் ஆட்சி செய்வதாக கூறுபவர் நில அளவையாளரிடம் அப்பகுதியை காட்டி அப்பகுதியை பிரிவிடல் செய்யவிருக்கும் காணியினின்றும் வேறுபடுத்தி விடப்பட்ட காணியாக (அதாவது பிரிவிடல் காணிக்குள் இல்லாத பகுதியாக) அளக்குமாறு கேட்க வேண்டும். அதற்குரிய நிச்சயமான எல்லைகளையும் விசாலத்தையும் கூற வேண்டும்.

அத்துடன் தான் சமர்ப்பிக்கும் உரித்து கோரிக்கையில் அப்பகுதி விடுபட்ட பகுதியென கூற வேண்டும். அதன் பின்னர் நீதிமன்றத்திடம் விடப்பட்ட அப்பகுதியை அளப்பதற்கு ஒரு நில அளவையாளரை நியமிக்குமாறு கேட்டு அளந்து கொள்ள வேண்டும்.

இறுதியாக இந்த நில அளவையாளரின் விடப்பட்ட பங்கின் படத்தையும் உரித்துக் கோரிக்கையுடன் சேர்த்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இறுதியில் வழக்கெழுவினா மூலம் அப்பகுதி தனக்குரியது என்று நீதிமன்றம் தீர்மானிக்கும் முறையில் அவ்வழக்கெழுவினாவை வழக்கில் எழுப்ப வேண்டும்.

அப்போது நீதி மன்றம் அப்பகுதியை அவரது தனிப்பட்ட பகுதியாக பிரகடனப்படுத்தலாம். இல்லையேல் நீதிமன்றம் அதனை பரிசீலிக்காது.

**குறிப்பு:-** பிரிவிடல் வழக்கில் நில அளவையாளர் தனது இறுதி அளவைப்படத்தையும் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்கிடையில் அந்த தீர்வை இரத்துச் செய்யுமாறு அத்தீர்வுக்கெதிரானவர் கோர வேண்டும். இல்லையேல் அத்தீர்வு இறுதியானதாகும் பின்னர் ஒன்றுமே செய்ய முடியாது.

பிரிவிடல் வழக்கில் இடைக்கால இறுதித் தீர்வே ஒரு முக்கியமான விடயமாகும். இடைக்கால இறுதித் தீர்வை மாவட்ட நீதிமன்றம் வழங்கிய பின்னர் அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்வதானால் பின்வரும் காரணங்களுக்காக மட்டுமே செய்யலாம்.

அ) அழைப்பாணை ஒருவருக்கு அனுப்பாமை.

ஆ) வலது குறைந்தோர் போன்றவர்கள் சார்பில் உரிய பதிலி நியமிக்கப்படாமல் தீர்வு வழங்கப்பட்டால்

இ) இறந்தவருக்கு எதிராக பதிலீடு செய்யப்படாமை

ஈ) உரிமை கோரிக்கை வைத்தவர் வழக்கின் விளக்கத்தில் பங்குபற்றாமை. (ஆனால் அவருக்கு விரோதமாக ஒரு தலைப்பட்ச நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட நீதிமன்ற பதிவாளரால் பதிவுத்தபால் அனுப்பப்பட்டிருந்தால் அவரது மேன்முறையீடு நிராகரிக்கப்படும்.)

மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டால் அதன்படி இடைக்கால தீர்வையைத் திருத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பணிக்கும் இல்லையேல் மேன்முறையீடு நிராகரிக்கப்படும்.

(தொடரும்...)

# பயங்கரவாதிகளின் 17 மறைவிடங்கள், ஏழு பயிற்சி முகாம்கள் கண்டுபிடிப்பு

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தகவல்



(கொழும்பு)

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகில் குண்டுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு உதவியாக செயற்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்த நபரை குற்றப் புலனாய்வுத் திணைக்களப் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் புதிய காத்தான்குடியைச் சேர்ந்த மொஹம்மட் ஆதம் லெப்பை என்ற சந்தேக நபரை சி.ஐ.டியினர் தடுப்பு காவலில் வைத்து விசாரித்து வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ,ருவான் குணசேகர தெரிவித்தார்.

இவர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், இவர்களிடம் பல்வேறு கோணங்களில் மேற்கொண்டு வந்த விசாரணைகளின் பிரகாரம் பயங்கரவாதிகள் பயன்படுத்தி வந்த 17 பாதுகாப்பான மறைவிடங்களையும் 7 பயிற்சி முகாம்களையும் கண்டுபிடித்துள்ளதாகவும் ருவான் தெரிவித்தார்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான குண்டுதாரியான சஹ்ரானின் மனைவியும் மருத்துவர்களின் ஆலோசனைக்கு அமைய சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்ற நிலையில் தற்பொழுது சி.ஐ.டியினரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் விளக்கமளிக்கையில்,

கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகில் குண்டுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் பாதுகாப்பாக வெடிக்கச் செய்யப்பட்ட வாகனத்திலேயே கொச்சிக்கடை குண்டுதாரியான அலாவுதீன் முஆத் வருகை தந்துள்ளார். கிங்ஸ்பெரி ஹோட்டல் குண்டுதாரியான முஹம்மட் முபாரக்கிற்குச் சொந்தமான இந்த வானை கொள்வனவு செய்வதற்கு உதவிய மற்றும் ஆசனத்தை பொருத்தியவர் எனச்சந்தேகிக்கப்படும் நபரையே சி.ஐ.டியினர் தேடி வந்த நிலையில் அவரை நேரில் கண்டவர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரம் வரையப்பட்ட நான்கு புகைப்படங்களை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டு சந்தேகநபரை கைது செய்ய பொதுமக்களின் உதவியை நாடியிருந்தது. இந்நிலையிலேயே சி.ஐ. டியினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் ஒன்றின்படி புதிய காத்தான்குடியைச் சேர்ந்த மொஹம்மட் ஆதம்லெப்பை என்பவரை கைது செய்துள்ளனர் என்றார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தலைமையில் இந்த பயங்கரவாதிகள் தொடர்பான விசாரணைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், பயங்கரவாதிகளுக்கு உதவிய ஒருசிலர் மாத்திரமே தேடி கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மறைவிடங்கள் மற்றும் பயிற்சி நிலையங்கள் தொடர்பான விபரங்கள்,

### மறைவிடங்கள்:

(1) கட்டுவாப்பிட்டிய - நீர்கொழும்பு, (2) சரிக்கமுல்லை - பாணந்துறை, (3) புனித அந்தோனியார் வீதி -கொழும்பு -3, (4) டெம்ப்ளஸ் வீதி - கல்கிஸை, (5) வணாத்தவில்லு - புத்தளம், (6) ஹெணடேரமுல்ல - வத்தளை, (7) மயூரா பிளேஸ் - கொழும்பு - 6, (8) சாய்ந்தமருது - அம்பாறை, (9) மல்வானை, (10) திஹாரிய - கலஹெடிஹேன, (11) கொச்சிக்கடை - தலுவகொடுவ, (12) வாழைச்சேனை - ரிதிய தென்ன, (13) சுபாரதிபுர - குளியாப்பிட்டி, (14) ஹெட்டிபொல - குருநாகலை, (15) கடுபொத்த, (16) நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள மறைவிடங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### பயிற்சி நிலையங்கள் :

(1) வணாத்தவில்லு, (2) அம்பாந்தோட்டை, (3) நுவரெலிய, (4) கண்டி- அருப்பொல, (5) மல்வானை, (6) காத்தான்குடி மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களையே பயங்கரவாதிகள், தமது பயிற்சிகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எமது சமூகத்தை இழிவுபடுத்தாதீர்

## ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்த அமீர்



(ஓட்டமாவடி)

இலங்கையிலுள்ள ஊடகங்கள் தர்மத்தோடு செயற்பட வேண்டுமே தவிர தயவுசெய்து சிறுபான்மை சமூகத்தை இழிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டங்களைச் செய்ய வேண்டாம் என்று விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலி கேட்டுக் கொண்டுள்ளார்.

ஓட்டமாவடி மீராவோடை மஸ்ஜிதுர் ரிழா பள்ளிவாசல் புனரமைப்புச் செய்யப்பட்டு தொழுகை நடவடிக்கைக்காக திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் மற்றும் சிங்கள ஊடகங்களோ அல்லது வேறு எந்தவொரு ஊடகமாக இருந்தாலும் சரி தர்மத்தோடு பேச தவறுமாக இருந்தால் நிச்சயமாக ஒரு சமூகம் முற்று முழுதாக வெறுத்து ஒதுக்குகின்ற ஊடகமாக அது மாற்றப்பட்டு விடும். அவ்வாறு இல்லையாயின் ஊடக தர்மமாக இல்லாமல் அது வேறொரு கசாப்புக் கடையாக இருக்கும்.

ஒரு கத்தியைக் கண்டுபிடித்தால் அல்லது பள்ளிவாசலில் கத்திகள் எடுத்தால் அதனை பெரிதுபடுத்தி பூதாகரமாக்குகின்றனர். இந்நாட்டில் சமையலறையில் பாண் வெட்டும் கத்தியை கூட பயத்தில் பொலிஸாரிடம், வீதியில், ஆற்றில் வீசுகின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டது ஊடகங்கள் இதனை பெரிதுபடுத்தி அச்சமூட்டிய காரணத்தினால்தான்.

ஊடகங்கள் தர்மத்தோடு செயற்பட வேண்டும். தயவு செய்து சமூகத்தை இழிவுபடுத்துவதற்கான வேலைத் திட்டங்களை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஒரு சிறுபான்மை சமூகத்தை இழிவுபடுத்துகின்ற, அச்சுறுத்துகின்ற, பயப்படுத்துகின்ற தன்மையை ஒரு ஊடகம் செய்யக் கூடாது என்பது எங்களது விநயமான வேண்டுகோளாகும்.

பாராளுமன்றத்தில் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களின் புதல்வர்கள் எங்களிடத்தில் கேட்கின்றார்கள் உங்களுக்கு இந்நாட்டில் வாழ முடியாது என்று சொன்னால் வேறு எங்காவது சென்று விடுங்கள் என்று கூறுகின்றனர். நாங்கள் எங்கு செல்வது. இதற்கு என்ன பதிலை வழங்க முடியும்.

முஸ்லிம் சமூகத்தில் இருந்து விரல் விட்டு எண்ணுமளவிலுள்ள ஒரு சிலர் செய்த இந்தச் செயலுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் பழியைச் சுமத்தி சங்கடத்திற்குள் உள்ளாக்காதீர்கள் என்ற செய்தியை பெரும்பான்மை சமூகத்தினரிடம் நாங்கள் சொல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேசிய அடையாள அட்டைகளை பெறுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

## ஆட்பதிவுத் திணைக்களம் தகவல்

ஒருநாள் சேவை மூலம் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தருவோரின் எண்ணிக்கை இருமடங் காக அதிகரித்துள்ளதாக, ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் காரணமாகவே இந்நிலைமை தோன்றியுள்ளதாக பணிப்பாளர் நாயகம் வியானி குணதில க்க தெரிவித்துள்ளார்.


இதன்படி, ஒருநாள் சேவைக்காக வருகைதருவோரின் எண்ணிக்கை 2,500 வரை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் ஒரு நாள் சேவையைப் பெற்றுக் கொள்ள வருவோரின் எண் ணிக்கை 1,200 ஆக காணப் பட்டுள்ளது.

அடையாள அட்டை யைப் பெற்றுக்கொள்வதற்காக வருவோரின் தொகை 2 மடங்காக அதிகரித்துள்ளமையால் மேலதிக அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, ஆட்ப திவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரி வித்துள்ளார். (இ-7)

# பொறுமையுடன் செயற்படாவிட்டால் நாட்டில் பாரிய அழிவுகள் ஏற்படும்

## வனஸ்பதி எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் போது அனைத்துத் தரப்பினரும் மிகவும் பொறுமையுடன் செயற்பட வேண்டுமெனவும் அவ்வாறு செயற்படாவிட்டால் பாரிய அழிவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது எனவும் வேடுவர் தலைவர் வனஸ்பதி ஊருவரிகே வன்னிலா எத்தோ எச்சரித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை தம்மானையிலுள்ள ஆதிவாசிகள் அல்லது வேடுவர்களையும் பாதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவால் தங்களது வியாபார நடவடிக்கைகளும் வீழ்ச்சியடைந்துள்ள அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் இவ்வாறான மோசமான சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் இம்முறை இடம்பெற்றது போன்று பாரிய அழிவுகள் ஏற்படவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சு.க. இதுவரை தீர்மானமில்லை - துமிந்த



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக சபாநாயகரிடம் நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதுவரை தீர்மானம் மேற்கொள்ளவில்லை என அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் கட்சியாக நீண்ட கலந்துரையாடலின் பின்னர் தீர்மானம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரும் கூட்டு எதிர்க்கட்சியிலும் அது தொடர்பில் இரண்டு கருத்து காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

249

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

மேற்படி நிர்வாகக் குழுக்களில் சிங்களப் பிரதிநிதிகள் பெரும்பான்மையாக இருந்த தன் விளைவாக சிங்களப் பிரதிநிதிகளே நிர்வாகக் குழுவின் தலைவர்களாக அரசாங்க சபைப் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்பட்டனர்.

எனவே டொனமூர் அறிமுகப்படுத்திய அமைச்சரவையில் சகல அமைச்சரும் சிங்களப் பிரதிநிதிகளாக இருந்தனர். இதுபற்றி பேராசிரியர் சிவராசா பின்வருமாறு கூறுகின்றார்.

முன்னரே நன்கு திட்டமிடப்பட்ட தந்திரோபாயத்தின்படி சிங்கள இனத்தவரையே அரசாங்க சபைத் தனது அமைச்சரவைக்குத் தேர்ந்தெடுத்தது. இதுவே பின்னர் முழுச் சிங்கள அமைச்சரவை என அழைக்கப்பட்டது.

மேலும் இது பற்றி ஜேன் றசல் (Jane Russell) பின்வருமாறு கூறுகின்றார்.

இதன் விளைவாக சிங்களவர் ஆதிக்கம் பெறுவதிலேயே குறியாகவுள்ளனர் என்ற எண்ணத்தில் இயல்பாகவே சிறுபான்மையினர் மேலும் உறுதிப்பாடு அடைந்தனர்.

சிங்களப் பிரதிநிதிகள் தமக்குச் சாதக்மாக அமைந்த அரசியல் திட்டத்தை ஆதரிப்பதற்காகவும் பிரித்தானிய அரசைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தமிழராகிய டபிள்யூ.துரைச்சாமி என்பவரை அரசாங்க சபையின் சபாநாயகராக நியமித்தனர்.

அத்தோடு ஜி.ஜி.பொன்னம்பலம், ஆர். சிறீபத்மநாதன், ஏ.மகாதேவா ஆகிய தமிழரை அமைச்சரவையின் நிறைவேற்றுக் குழுவுக்குத் துணை அமைச்சர்களாகத் தெரிவு செய்தனர்.

உண்மையில் மேற்குறிப்பிட்ட தமிழர் அப்பதவிக்கு ஆசைப்படாமல் அமைச்சரவையில் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு இடம் தரப்படவில்லை என்பதனையிட்டு பிரித்தானிய அரசுடன் வாதாடியிருக்க வேண்டும்.

தமிழ்த் தலைவர்கள் தமிழரின் அரசியல் எதிர்காலம் குறித்துத் தூரநோக்குடன் செயற்படாது தமது சொந்த அபிலாசைகளிலும் பதவிகளிலுமே கண்ணாக இருந்துள்ளனர் என்பதனை 18.04.37 ஈழகேசரியில் வெளிவந்த கட்டுரை துல்லியமாகக் காட்டுகின்றது.

இலங்கைச் சனத்தொகையில் சுமார் 50 வீதம் சனத்தொகையைக் கொண்டிருந்த சிங்கள மக்கள் இருந்த நிலையிலும் இலங்கை புவியியல் ரீதியாக மூன்றில் இரண்டு பங்கு பிரதேசத்தைச் சிங்கள மக்கள் கொண்டிருந்த நிலையிலும் டொனமூர் ஆணைக்குழுவினர் சர்வஜன வாக்குரிமை வழங்கியமையும் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியமையும் இயல்பாகவே சிங்களத் தலைவர்களிடம் அரைப்பங்கினதான பொறுப்பைக் கொண்டதொரு அரசாங்கத்தைக் கொண்டதாகவே பிரதிநிதித்துவ விகிதாசாரம் காட்டி நிற்கின்றது.

அத்தோடு எதிர்காலத்தில் இலங்கையின் பூரண ஆட்சியதிகாரம் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்களிடத்தில் செல்வதற்கான ஓர் இலகுவான வழியினையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

இதன் விளைவாகச் சிறுபான்மையினரான தமிழரின் அரசியல் சுதந்திரமும் அவர்களின் பூரண சுயாட்சி உரிமையும் நிரந்தரமாகப் பறிக்கப்படுவதற்கான திடமான அத்திபாரத்தை டொனமூர் ஆணைக்குழுவினர் அமைக்க உதவினர் என்றே கூறவேண்டும். டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் திட்டம் தமிழரின் அரசியலில் தொடர்ந்து வந்த காலங்களில் ஏற்பட்ட அரசியல் சீர்குலைவுக்குக் காரணமாக அமைந்தது.

| இனம் | தொகை | சதவீதம் |
|---|---|---|
| ஐரோப்பியர் | 9,153 | 00.2 |
| பறங்கியர் | 32,315 | 00.6 |
| சிங்களவர் | 3,473,030 | 65.4 |
| தமிழர் | 1,417,477 | 26.8 |
| முஸ்லிம்கள் | 325,913 | 06.1 |
| மலேயர் | 15,977 | 00.3 |
| ஏனையோர் | 32,564 | 00.6 |
| மொத்தம் | 5,306,429 | 100.0 |

### 1944-45 சோல்பரி ஆணைக்குழுவின் அரசியல் சீர்திருத்தம்

1936 ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து 1944 ஆம் ஆண்டு வரையில் சோல்பரி பிரபுவின் (Lord Soulbury) தலைமையின் கீழ் மன்னர் ஆணைக்குழு (Royal Commission) ஒன்றைப் பிரித்தானிய அரசு நியமித்தது.



சோல்பரி பிரபு (Lord Soulbery)

இலங்கை அரசியல் யாப்பைத் திருத்தியமைத்து அனுப்பும் வரையிலான 8 வருட காலப்பகுதியில் தமிழரின் அரசியலில் முக்கியமாக இடம்பெற்ற விடயமாக (Balanced Representation) சமபிரதிநிதித்துவம் இடம்பெற்றது.

கொழும்பைத் தளமாகக் கொண்டிருந்த தமிழ் அரசியல் தலைவர்கள் சோல்பரி அரசியல் யாப்புச் சீர்திருத்தக் காலத்தில் சமபிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைத்தனர்.

அதே காலப்பகுதியில் வடமாகாண அரசியல் தலைவர்கள் இறைமையுள்ள ஒரு தனியான அரசியல் நிர்வாகம் வேண்டுமென பிரித்தானிய அரசிடம் கோரிக்கையை முன்வைத்தனர்.

தமிழரின் கோரிக்கைக்கு முன்பதாகவே 1927 இல் மத்திய மாகாணத்தில் குறிப்பாகக் கண்டிப் பிரதேச அரசியல் தலைவர்கள் தமக்குத் தனியரசு வேண்டுமெனக் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு மகஜர் அனுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடக்கக்கது.

தமிழ்ப் பிரதேசத்திற்கு சமஷ்டி அமைப்பு முறை அரசியல் யாப்பு தேவையென 1938 இல் யாழ்ப்பாணத்திலிருந்து பி. சின்னத்துரை வேண்டி நின்றமை பற்றி இந்து சாதனத்தில் வெளிவந்த ஒரு கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதைவிட எம். கணபதிப்பிள்ளை என்பவர் All Ceylon Aboriginal Inhabitants (Tamil) Association சங்கத்திலிருந்து தமிழிலும் ஆங்கிலத்திலும் குடியேற்றச் செயலாளருக்கு அனுப்பிய ஆவணங்களும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் நவம்பர் 1940 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற மாநாட்டில் All Ceylon Aboriginal Inhabitants (Tamil) Association இலங்கை யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கையை மேற்படி சங்கத்தின் செயலாளர் குடியேற்ற நாடுகளின் அரச செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி அறிக்கைகளிலிருந்து சில முக்கியமான விடயங்களை அறிந்துகொள்ள முடிகின்றது. (தொடரும்)

## இலங்கை ஒரு பௌத்த நாடு அல்ல

# மங்களவின் கருத்தைக் கேட்டு வன்முறையில் ஈடுபட வேண்டாம்

## பௌத்த மக்களிடம் தம்மரத்ன தேரர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை ஒரு பௌத்த நாடு அல்ல என்று நிதியமைச்சர் மங்கள சமரவீரவின் கருத்தில், இனங்களுக்கிடையில் மோதலை உருவாக்கும் உள்நோக்கம் புதைந்துள்ளதா? என்ற சந்தேகம் எழுவதாக பதுளை புராதன ரஜ மகா விகாரையின் பொறுப்பாளர் கலாநிதி முருந்தெனிய தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பதற்ற நிலைமையில் இவ்வாறான ஒரு அறிவிப்பை அமைச்சர் முன்வைப்பது எந்தவகையிலும் பொருத்தமான ஒன்று அல்லவெனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் அண்மையில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களின் பின்னர் மக்கள் அமைதியாகவும், பொறுமையாகவும் இருக்கும் நிலையில், ஏதாவது ஒரு வகையில் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தீவிரப்படுத்தி, அவர்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தும் உள்நோக்கம் மங்களவின் இந்த அறிவிப்பில் உள்ளதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், இதுபோன்ற தூர நோக்கில்லாதவர்களின் அறிவிப்புக்களால், கோபமடைந்து, வன்முறைகளில் ஈடுபடாமல் பொறுமையாக இருக்குமாறு இந்த நாட்டிலுள்ள சகல பௌத்த மக்களிடமும் மிக முக்கியமாக கேட்டுக் கொள்கின்றோம் எனவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# குற்றச்சாட்டுக்குள்ளான இராணுவ அதிகாரி மீண்டும் சேவையில்

(நியூ,யோர்க்)

ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்ட குற்றச்சாட்டுக்குள்ளாகியிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதை சர்வதேச அமைப்பு ஒன்று கண்டித்துள்ளது.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

மேஜர் பிரபாத் புலத்வத்தே என்ற இந்த அதிகாரி, 2008 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்தில் தொடர்புபட்டிருந்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அவர் 2017 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட போதும் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் அவர் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளமை ஊடகவியலாளர்கள் மத்தியில் அச்சத்தை தோற்றுவித்துள்ளதாக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# அமைச்சர் றிசாத்துக்கு எதிரான பிரேரணைக்கு நாம் முழு ஆதரவு

## பொதுஜன பெரமுன அறிவிப்பு



(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பொதுஜன பெரமுனவினர் முழுமையாக ஆதரவு வழங்குவோம் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில் ஆளும் தரப்பினரும் தற்போதைய நிலையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது. சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பொதுஜன பெரமுன சார்பில் முழுமையான ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இதன்போது ஏகமனதாக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாளை குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# டான் பிரஷாத்துக்குப் பிணை




பொலிஸாரால் கைது செய்யப்பட்ட டான் பிரஷாத்துக்குப் பிணைவழங்கப்பட்டுள்ளது.

புதிய சிங்ஹலே அமைப்பின் தலைவரான டான் பிரஷாத் வெல்லம்பிட்டியவில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைபடுத்து கைது செய்யப்பட்டார். குறித்த நபர் விசாரணையின் பின் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1722

### ராம்

எருமையின் பயன்கள் என்ன?'
பால் கொடுப்பதற்கு, நம்மை திட்டுவதற்கு



### சரண்

அண்ணே பொய்சனுக்கு எக்ஸ்பையரி டேட் முடிஞ்சிடுச்சின்னா அது பொய்சனா இருக்குமா!
இல்ல பாயாசமா மாறிடும்...
ஒருவாய் குடிக்கிறியா?



### பிரவீனா

ராவணன்: ஏன்டா ஒவ்வொரு தசராவுக்கும் என் உருவப்பொம்மையை கொளுத்துறீங்களே நான் என்ன உங்க பொண்டாட்டியவாடா தூக்கிட்டு போனேன்.
ஒருவன்: ஏன் தூக்கிட்டுப் போகலைன்னுதான் கொளுத்துறோம்.



### ஜெசி

உண்மைதானே!
முகப்புத்தகம் வந்தப்பிறகு
யாரு நிஜப் புத்தகத்தை மதிக்கிறா?'




### ராம்கி

நமக்குத்தான் வாழ்க்கை ரொம்ப கடினம்னு நினைச்சிகிட்டு இருந்தேன்



### விஷ்வா

அப்பா நான் ஸ்கூலுக்கு நாளைக்கும் போகமாட்டேன்... ஏன்டா... அதிகமா ஹோம்வோர்க் தராங்க... அதனால ஸ்டிரைக்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### முஸ்லிம் ஆசிரியர்கள் திடீர் இடமாற்றம்

# கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவின் இனப்பாகுபாடான செயற்பாடு



## வியாழேந்திரன் எச்சரிக்கை

(ஏறாவூர்)

பொறுப்புணர்வு இல்லாமல் கிழக்கு மாகாண ஆளுநர் இன ரீதியாகச் செயற்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதன்படி, கிழக்கில் தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்பித்துவரும் முஸ்லிம் ஆசிரியர்களை கிழக்கு ஆளுநர் உடனடியாக இடமாற்றிவரும் செயற்பாட்டால் தமிழ்ப் பிள்ளைகளுடைய கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கிழக்கில் தமிழ்க் கல்வி வலய பாடசாலைகளை மூடி பெற்றோர்கள் வீதியில் இறங்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பில் தமிழ்ப் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆளுநரின் தீவிர நடவடிக்கையாக, கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் முஸ்லிம் ஆசிரியர்களை அவசரமாக இடமாற்றம் செய்துவருகின்றார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்கு அமைய மாகாண கல்விப் பணிப்பாளர் மன்சூர் அதிரடியாக இந்த வேலையில் இறங்கியுள்ளார். வழமையாக ஒரு ஆசிரியரை ஒரு பாடசாலையிலிருந்து விடுவிப்பதாக இருந்தால் அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் அனுமதி பெறப்பட வேண்டும். அத்துடன் பதில் ஆள் இன்றியும் விடுவிக்க இயலாது. இருந்தும் யாருடைய அனுமதிகளையும் பெறாமல் சகல விதிகளையும் மீறி இச்செயல் நடைபெறுகிறது .

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா, மண்முனை மேற்கு என நான்கு தமிழ்க் கல்வி வலயங்கள் இருக்கின்றன. இந்தக் கல்வி வலயங்களில் மாகாணப் பாடசாலைகள், தேசிய பாடசாலைகள் அடங்கலாக 252 முஸ்லிம் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இதில் 4 தினங்களில் 120 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்று முஸ்லிம் பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர்.

பட்டிருப்பு வலயத்தில் 123 ஆசிரியர் பற்றாக்குறையுள்ளதுடன் 61 முஸ்லிம் ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர். இதில் 18 முஸ்லிம் ஆசிரியர்கள் இடம் மாறிச் சென்றுள்ளனர். ஏனையவர்களும் செல்லவுள்ளனர். அத்துடன் கல்விசாரா ஊழியர்கள் 12 பேரும் இடமாற்றம் கேட்டுள்ளனர்.

அவ்வாறே மட்டக்களப்பில் 9 ஆசிரியர்களும் கல்குடா வலயத்தில் 71 ஆசிரியர்களும் மண்முனை மேற்குவலயத்தில் 22 ஆசிரியர்களும் வெளியேறியுள்ளனர்.

எனவே கிழக்கு மாகாண ஆளுநர் முஸ்லிம்களுக்கு மட்டுமான ஆளுநரா எனச் சந்தேகம் ஏற்படுகின்றது?

இந்நிலையில், கடந்த 3 தசாப்தங்களாக யுத்தத்தால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தன்னுடைய இனத்தை மட்டுமே சிந்தித்து செயற்படுகின்ற கிழக்கு ஆளுநர் உடனடியாக, வெளியேறி முஸ்லிம் ஆசிரியர்களுக்கு சமனாக தமிழ் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

அதேநேரம் முஸ்லிம் பாடசாலையில் கற்பிக்கின்ற தமிழ் ஆசிரியர்கள் விடுவிக்கப்படவேண்டும். அதில் வெற்றிடமாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கு தமிழ் வேலையற்ற பட்டதாரிகள் உடன் நியமிக்கப்படவேண்டும்

இல்லாவிட்டால் கிழக்கில் கல்வி வலயங்கள், பாடசாலைகளை மூடி பெற்றோர்களும் மாணவர்களும் வீதிக்கு இறங்குவார்கள். இந்த செய்தியை ஜனாதிபதிக்கும் தெரிவிப்போம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அடுத்த சஹ்ரான்களை உருவாக்கும் பணியில் அரசு

## ஜே.வி.பி.பகிரங்க குற்றச்சாட்டு

(ஹிங்குராங்கொட)

**அடுத்த சஹ்ரான்களை உருவாக்கும் பணியை தற்போது அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குற்றம் சாட்டியுள்ளார்.**



ஹிங்குராங்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார். "உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பயங்கரவாதிகளின் வெற்றியல்ல. நாட்டின் ஆட்சியாளர்களின் தோல்வியே தாக்குதல் வெற்றியடைய காரணம்.

நாட்டின் பாதுகாப்பைப் பாதுகாப்பற்றதாக மாற்றி. வாக்குப் பலத்தை அதிகரிப்பதற்காக அடிப்படைவாதிகளை ஊக்குவித்தமை தற்போது உறுதியாகியுள்ளது.

அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பயங்கரவாதம் ஊக்குவிக்கப்பட்டுள்ளது என்பது அண்மைக் கால சம்பவங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் இனவாதத்தை தூண்டிவிட்டு ஜூலைக் கலவரத்தை ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் அது இரண்டு, மூன்று நாட்கள் மாத்திரமே நீடித்தன.

ஆனால், ஏப்ரல் 21 தாக்குதல் இடம்பெற்று மூன்று வாரங்களின் பின்னர் மினுவங்கொட உள்ளிட்ட பிரதேசங்களில் இனவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன் பின்னணியில் இருப்பவர் யார்?

சஹ்ரான்கள் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், அடுத்த சஹ்ரான்களை உருவாக்கும் பணியை தற்போது அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது என்றும் சுனில் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)

# பயங்கரவாதி சஹ்ரானின் மகளை பொறுப்பேற்க யாரும் வரவில்லை

## பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் மனைவி மற்றும் மகள் குற்ற விசாரணைத் திணைக்கள பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

தற்கொலைத் தாக்குதல் நடத்தி உயிரிழந்த சஹ்ரானின் மகளை எவரும் பொறுப்பேற்க முன்வரவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக 4 வயது மகள் தாயுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித் தார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தினர். இதில் பயங்கரவாதிகள் உட்பட குடும்ப உறுப்பினர்கள் 15 பேர் உயிரிழந்தனர்.

எனினும் இதிலிருந்து தப்பித்த பயங்கரவாதி சஹ்ரானின் மனைவி மற்றும் மகள் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

தற்போது உடல்நிலை தேறியுள்ள நிலையில், கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாதியின் 21 ஏக்கர் காணி மாத்தளை பிரதேச சபைக்கு சுவீகரிப்பு

(மாத்தளை)

கடந்த 21 ஆம் திகதி கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் பயங்கரவாதத் தாக்குதலை மேற்கொண்ட பயங்கரவாதியான இன்சாப் அஹமட் என்பவனின் காணியொன்றை மாத்தளைப் பிரதேச சபைக்கு எடுத்துக் கொள்ளும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தக் காணி மாத்தளை பிரதேச குப்பை சுத்திகரிப்பு நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக இந்த பிரேரணையை முன்வைத்த பிரதேச சபை உறுப்பினர் நாலக்க பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தப் பயங்கரவாதிக்குரியதாக காணப்பட்ட 21 ஏக்கர் காணியே இவ்வாறு பிரதேச சபைக்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 120 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 130 | 160 |
| தக்காளி | 120 | 140 | 110 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 130 | 80 |
| கோவா | 100 | 100 | 80 | 100 |
| கரட் | 80 | 120 | 80 | 160 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 130 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 160 | 240 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 40 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 110 | 160 |
| பீற்றூட் | 120 | 120 | 60 | 160 |
| கறிமிளகாய் | 160 | 100 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 60 | 80 | 80 |
| போஞ்சி | 260 | 240 | 360 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 90 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 150 | 110 | 120 |
| வெங்காயப்பூ | 250 | 240 | 240 | — |
| முள்ளங்கி | 80 | 80 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 110 | — |



# சிறுவர் அரங்கம்

## பணம் கொடு!



முன்னொரு காலத்தில் சூரியன் தனக்கு கொஞ்சம் பணம் தேவை என்றும் அதை வெகு விரைவிலேயே திருப்பித் தந்து விடுவதாகவும் இராசாளியிடம் கடன் கேட்டது.

இராசாளியும் சூரியனுக்கு பணத்தைக் கொடுத்தது. ஆனால் வாரங்கள், மாதங்கள் என்று நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தனவே தவிர, சூரியன் வாங்கிய பணத்தைத் திருப்பித் தரவில்லை. இதனால் இராசாளி சூரியன் இல்லத்திற்கு நேரில் சென்று பணத்தைப் பெற்று வரலாம் என்று முடிவு எடுத்து, சூரியன் இல்லம் சென்றது. சூரியன் அந்தச் சமயம் வானத்தின் உச்சியில் இருந்தது.

"நீ எனக்குப் பணம் தர வேண்டும் என்பது உனக்கு நினைவு இருக்கிறதா?" என்று சூரியனிடம் இராசாளி கேட்டது.

"ஆமாம் பணம் தர வேண்டும். நான் இப்போது வானத்தில் இருக்கிறேன். பணம் வீட்டில் அல்லவா இருக்கிறது. தயவு செய்து நீ வீட்டிற்கு வா, பணம் தருகிறேன்" என்று சூரியன் பதில் தந்தது.

சரிஎன்று இராசாளியும் சென்றுவிட்டது. அடுத்த நாள் காலை, சூரியன் இல்லம் செல்ல இராசாளி தீர்மானித்திருந்தது. ஆனால் அது சற்றுக் காலம் தாழ்ந்து தாமதமாகச் சென்றதால் சூரியன் வீட்டில் இல்லை. வானத்திற்குச் சென்று விட்டது. பல முறை இராசாளி, சூரியன் இல்லம் சென்றது. சூரியன் வீட்டில் இல்லாது போகவே வீட்டில் இருக்கும் போது இராசாளியினால் சூரியனைக் காண இயலவில்லை.

ஒரு நாள் இராசாளி, சூரியன் இல்லம் நோக்கிச் சென்றபோது தனது நண்பன் சேவலைக் கண்டது.

"நீ, தினமும் ஏன் சூரியன் இல்லம் செல்கிறாய்" என்று சேவல் இராசாளியிடம் கேட்டது.

"நீண்ட நாட்களுக்கு முன் நான் சூரியனுக்கு பணம் கடனாகக் கொடுத்திருந்தேன். அதைப் பெற தினமும் சூரியன் இல்லம் செல்கிறேன். சூரியன் வீட்டிலிருக்கும் போது பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறியிருக்கிறது. நான் சூரியன் வீட்டிற்கு செல்லும் போது, சூரியன் வீட்டில் இருப்பதில்லை" என்று இராசாளி பதில் தந்தது.

"நான் உனக்கு உதவி செய்கிறேன். நீ ஓர் இரவு என்னுடன் தங்கியிரு. நான் எப்பொழுதும் சூரியன் எழுவதற்கு முன் எழுந்துவிடுவேன். ஆகவே, நான் உன்னை விரைவிலேயே எழுப்பி விடுகிறேன். நீ, சூரியனிடம் ஓடிச் சென்று உன் பணத்தை பெற்றுக் கொள்" என்று சேவல் தெரிவித்தது.

அன்று இரவு இராசாளி, சேவலுடன் தங்கியது. விடியற் காலையில் சேவல் விழித்து எழுந்து "கொக்கரக்கோ, கொக்கரக்கோ" என்று கூவியவாறு, தனது நண்பன் இராசாளியை எழுப்பி, "சூரியனிடம் ஓடு. சூரியன் இப்போது வீட்டில் இருக்கிறது. அது இன்னும் வானத்திற்குச் செல்லவில்லை" எனக் கூறியது.

இராசாளியும், படுக்கையிலிருந்து எழுந்து சேவலுக்கு நன்றி கூறிவிட்டு, சூரியன் இல்லம் சென்றது. சூரியன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தது.

"சூரியனே! வணக்கம். நீ எழும் நேரமாகிவிட்டது. நீ வீட்டிலிருக்கும் போது என் பணத்தை பெற்றுச் செல்ல வந்திருக்கிறேன்" என்றது இராசாளி.

"வணக்கம்! உன்னை இவ்வளவு அதிகாலையில் இங்கு வருமாறு உனக்கு யார் கூறியது?" என்று சூரியன் கேட்டது.

இராசாளி பதில் கூறாது மௌனம் சாதித்தது.

"உனக்குப் பணம் தேவை என்றால், இங்கு இவ்வாறு அதிகாலையில் வருமாறு யார் கூறியது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்" என்று சூரியன் அதட்டிக் கேட்டது.

"சேவல்தான் இவ்வாறு சொல்லியது!" என்று இராசாளி பதில் கூறியது.

சூரியனுக்கு சேவல் மீது கோபம் எழுந்தது. "இதற்கான பணத்தை சேவல் தான் தரவேண்டும். இன்று முதல் எல்லா சேவலின் குஞ்சுகளும் உன்னைச் சார்ந்தது" என்று கூறிவிட்டு, சூரியன் சென்று விட்டது.

அன்று முதல் இராசாளிகள் கோழிக் குஞ்சுகளை தூக்கிச் செல்லத் தொடங்கி விட்டன குட்டீஸ்...

## எங்கள் வீட்டுப் பூனை...



சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை

வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை

பாலைக் குடிக்கப் பார்க்கும்
பதுங்கி இருக்கும் பரணில்
வாலைப் பற்றி இழுத்தால்
வளைந்து கையைக் கடிக்கும்.

நாயைப்பார்த்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறு
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்

எலியைக் கிளியைப் பிடிக்கும்
ஏறி மரத்தில் நடிக்கும்
புலியைப் போல இருக்கும்
புள்ளிக் கோட்டுப் பூனை

உண்ணுஞ் சோறும் பாலும்
ஊட்டி வளர்த்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை

## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



## பொது அறிவுத்துணுக்குகள்

- வானவில்லில் 7 நிறங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடித்தவர், ஐசக் நியூட்டன்.
- 'திராவிட மொழியியல் ஆய்வின் தந்தை' என்று அழைக்கப்படுபவர், கால்டுவெல்.
- வரிக்குதிரை, ஆபிரிக்க கண்டத்தில் மட்டுமே காணப்படுகிறது.
- சிப்பியில் முத்து உருவாக சுமார் 15 ஆண்டுகள் ஆகும்.
- 'செவாலியர்' விருதை வழங்கும் நாடு பிரான்ஸ்.

நேர்மையும் நல்லெண்ணமும் இருக்கிறபோதெல்லாம் இறைவனின் உதவியும் உள்ளது!

- ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தவமிருந்து பெற்ற இந்துப் பீடத்தை சிறப்பாக இயக்குங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் மக்களின் கல்விக்கான அடையாளம். சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் அவர்களின் ஈகையால் கிடைத்த பெரும் சொத்து.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை இந்துப் பல்கலைக்கழகமாக அமைக்க வேண்டும் என்பது பலரின் ஆதங்கமாக இருந்தபோதிலும் சமயத்தால் பிரிவிடல் செய்யக்கூடாது என்ற உயர்ந்த பண்பு சைவ மக்களிடம் இருந்ததன் காரணமாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமென்று பெயரிடுவதற்கு இணங்கப்பட்டது.

எனினும் இன்றைய சூழ்நிலையில் சேர் பொன்.இராமநாதன் அவர்கள் ஈகை செய்த நிலமும் கட்டிடமும் அடையாளமும் மறைபட்டுப் போகின்றன.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப கால நுழைவாயில் தூண் அகற்றப்பட்டதும் அந்தத் தூணில் இருந்த இரண்டு நந்திகள் உடைக்கப்பட்டதும் நடந்தேறிய முதற்சம்பவம்.

எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிற் தூணும் அதன் மேல் வீற்றிருந்த இரண்டு நந்திகளும் காலம் காலமாகக் காப்பாற்றப்பட்டிருக்க வேண்டிய அருங்கலைப் பொக்கிசங்கள்.

உலகம் முழுவதும் பழையனவற்றைப் பேணிப் பாதுகாத்து நிற்கையில், நாம் மட்டும், யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் கம்பீரமாக நின்றிருந்த பழைமை வாய்ந்த இரு தூண்களையும் அதன்மேல் இருந்த அழகான இரண்டு நந்திகளையும் உடைத்து எறிந்தோம் எனும்போது எங்களின் மனநிலை எவ்வாறு உள்ளதென்பது புரிதற்குரியது.

வரலாறு, தொல்லியல், இந்து நாகரிகம், தமிழ் எனப் பல துறைகள் இருந்தபோதிலும்,

ஐயா! நுழைவாயில் தூணை, நந்தியை உடைக்காமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று எழுந்தொருவர் கூறவில்லை எனும் போது, இனி எங்கள் இனத்தின் எதிர்காலம் எப்படியாக இருக்கும் என்பதை எடுத்துரைக்க வேண்டிய தேவையில்லை.

எதுவாயினும் சேர் பொன்.இராமநாதன் அவர்களின் உருவச்சிலையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் எடுத்த முயற்சி வெற்றி கண்டதால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடிப்படை வரலாறு ஆவணமாகிவிட்டது என்றளவில், மனம் ஆறுதல் அடைகிறது.

அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறை தனிப்பீடமாக உருவாக்கப்பட்டது என்ற அறிவிப்பு எங்களைத் தலைநிமிர வைத்துள்ளது.

இந்து நாகரிகத்துறையின் தலைவராக இருந்த பேராசிரியர் கைலாசநாதக் குருக்களின் விருப்பமும் இந்து நாகரிகத்துறையைத் தனிப்பீடமாக ஆக்க வேண்டும் என கடுமையாக முயற்சி செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் முயற்சியும் இன்னும் இதனோடு தொடர்புடையவர்களின் அர்ப்பணிப்பும் விடா முயற்சியும் இந்து நாகரிகத்துறையைத் தனிப் பீடமாக ஆக்கித் தந்துள்ளது.

இனி இந்துப் பீடத்தை மிகச் சிறப்பாகச் செயலாற்றுவதுதான் அந்தக் கிடைப்பனவின் வெற்றியை அனுபவிப்பதற்கான வழி.

விஞ்ஞானம், கணிதம், மருத்துவம் என்றால் அது சார்ந்தவர்கள் கலைத்துறையை எதிர்ப்பதை; இந்துத் துறையை அசமந்தம் செய்வதைத் தங்களின் கௌரவமாகக் கருதுகின்ற மிகப்பெரிய பலயீனம் எங்கள் தமிழினத்தில் இருக்கிறது.

இந்தப் பலயீனத்தை தூக்கி எறிந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறையினரும் அனைத்து நிர்வாகமும் இந்துப் பீடத்தை வளர்த்தெடுத்து ஆன்மீக சூழலுக்கு செழுமை சேர்க்க வேண்டும்.

கூடவே இந்துப் பீடம் கிடைத்ததை வரலாறாக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எல்லைத் தூண்கள் (சுற்றுமதில்) முழுவதிலும் நந்தி உருவச் சிலைகளை நிறுவுவது ஒரு புதிய அத்தியாயத்தின் எழுச்சியாக அமையும்.

# முஸ்லிம் சமூகம் மீதான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவது எமது கடமை

## அமைச்சர் கபீர் ஹாசிம் உறுதி

(கொழும்பு)

முஸ்லிம் சமூகத்தினர் மீதான இழந்த நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவது எமது கடமை என அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு அமைச்சர் என்ற ரீதியில் அன்றி, இலங்கையின் முஸ்லிம் அரசியல்வாதி என்ற அடிப்படையில் இங்கு பேசுவதற்கு நான் முன்வந்துள்ளேன்.

ஒரு நாடு என்ற ரீதியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படத் தவறினால் பயங்கரவாதச் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே, ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியமாகும். நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி, இனங்களுக்கு இடையே மோதல்களை ஏற்படுத்தி, இப்பிரச்சினையை பாரதூரமான நிலைக்கு இட்டுச் செல்வதே ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் இலக்காகக் காணப்படுகிறது.

எனவே, பயங்கரவாதிகளின் இந்தச் சதிக்குள் சிக்கிக் கொள்ளாது கவனமாக செயற்படுவது அவசியமாகும்.

83ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின் ஊடாகவே அக்காலப்பகுதியில் விடுதலை புலிகள் அமைப்பு பலமடைந்தது. எனவே, நாம் கவனமாகச் செயற்பட வேண்டியது அவசியம்.

இலங்கையர் என்ற ரீதியில் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நான் இலங்கையர் என்ற அடிப்படையிலேயே வாழ்ந்து வருகின்றேன். இதனை என்னால் மாற்றிக்கொள்ள முடியாது.

நாட்டில் குழப்பத்தை விளைவித்த சிறு குழுவைப் பார்த்து அனைவரையும் மதிப்பிட வேண்டாம். எம் மீதான நம்பிக்கை வீழ்ச்சியடைய எமது தரப்பிலும் குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். அதனை மாற்றுவதற்கு நாம் தயார். இலங்கையர் என்ற ரீதியில் நாட்டிற்காக ஒன்றிணைந்து பணியாற்றத் தயார்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோபபாய் பிரதேச தேசோதய அலுவலகத்தில் கோப்பாய் பிரதேச தேசோதய அமைப்பின் தலைவர் இ.மயில்வாகனம தலைமையில் இடம்பெறும்.

இந்தக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ். யுகேந்திரா வளவாளராகக் கலந்து கொள்வார். (இ-10,134)

## ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடையவர் கைது

உயிர்த்த ஞாயிறு தினமான ஏப்ரல் 21ஆம் திகதி தற்கொலை குண்டுத்தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மொஹமட் ரிஸ்வான் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

வத்தளை - மாபொல பகுதியில் வைத்து அவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

"மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மொஹமட் ரிஸ்வான் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 05 கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மொஹமட் ரிஸ்வான் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்" என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். (ம)

## 'எமக்கும் சந்தர்ப்பம் வரும் கடவுள் பார்த்துக்கொள்வார்'

### பேஸ்புக்கில் பதிவிட்ட இளைஞன் கைது

(இறக்குவானை)

எமக்கும் சந்தர்ப்பம் வரும். கடவுள் எம்மைப் பார்த்துக் கொள்வார்' என தமிழ்மொழியில் பேஸ்புக்கில் பதிவிட்ட இளைஞன் ஒருவன் இறக்குவானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறக்குவானை - ஒரேன்ஜ் பீல்ட் தோட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பதிவு தொடர்பில் நபர் ஒருவர் பாதுகாப்பு பிரிவினருக்கு வழங்கிய தகவலுக்கமையவே, இவர் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## குடும்பாபிஷேக மலர் வெளியீடு இன்று

வேலணை மேற்கு முடிப் பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக மலர் வெளியீடு இன்று முற்பகல் 11 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

இதேவேளை மேற்படி ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று இடம்பெறுகிறது.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மன்னார் பிரதேசத்தில மன்னார் நகரம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட்சிற்றி, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

முருகன் கையில் வேலும் சேவற்கொடியும் கீழே மயிலும் பாம்பும் வைத்திருப்பதன் உட்பொருள் இதுதான்.

வேல்-ஞானம், மயில்-விந்து, சேவல்- நாதம். நாதவிந்து கலா தீ என்பதனால் அறிக. குண்டலி என்ற பாம்மை ஓம் என்ற மயில் அடக்குகிறது.

முருகன் கையில் உள்ள வேல் காதுவரை அமைந்திருக்கவேண்டும். ஆயுதம் இறைவனுக்கு அடங்கித் தானே இருக்க வேண்டும்.

முருகன் திருவருள் கிட்ட முழு அன்பைச் செலுத்தி வழிபடவேண்டும். தியானம் புரிதல் வேண்டும்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### திரும்பி வரக்காரணம்

"அது சரி இல்லை" என்ற விதையை மனதில் வைத்துக்கொண்டே நம்மில் பலர் இவ்வுலகிற்கு வருகிறோம். நம வாழநாள முழுவதும நிகழசசிகள, மககள சூழ்நிலைகள் இவற்றைத் திருத்துவதற்கு நாம் முயலுகிறோம். என்னால் எவ்வளவு திருத்தமுடியும்? அது ஆகாயத்திலுள்ள மேகங்களை ஒழுங்குபடுத்த முயல்வது போன்றுள்ளது. இந்த விதை நீ மகிழ்ச்சியாக இருக்கவும் இதயத்திலிருந்து நீ புன்னகைக்கவும் அன்புடையவனாக இருக்கவும் அன்பைப் பெறக்கூடியவ னாக இருக்கவும் விடுவதில்லை. இந்த விதை எல்லாச் சமயத்திலும் உள்ளே இருந்து முள்ளைப் போல் உறுத்திக் கொண்டேயிருக்கிறது.

" அது சரியில்லை"- இந்தவிதை- உன்னைத் திரும்பத் திரும்ப இவ்வுலகிற்குக் கொண்டு வருகிறது. நீ எப்படி இந்த வித்தை எரிப்பாய்?

முதலில் அது அங்கேயிருப்பதை அடையாளம் கண்டுகொள். உன்னுள் ஆழ்ந்து உன்னை அறிந்து கொளவதனாலும ஆழநத தியானததனாலும மடடுமே அதைக் கண்டு கொள்ளமுடியும்.

சில சமயஙகளில உன உடல, மனம,புததி, நினைவாற்றல், ஆணவம் இவை எல்லாம் கூட சரியாக இல்லை என நீ உணர்கிறாய். அவற்றிற்கு நீ நியாயம் கற்பிக்கிறாய் அல்லது அவற்றில் குறை காண்கிறாய். இவையெல்லாம் கூட உலகின் பாகம்தான். எதெல்லாம் நிறைவாக இலலாது குறையுடன உளளது என ந பாரககிறாயோ அதை நீ இறைவனுக்கு அர்ப்பணித்துவிடு. (தொடரும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### காலையில் கண்விழித்ததும் இவற்றையெல்லாம் பார்த்தால் அதிர்ஷ்டமாம்

காலையில் தூக்கத்தில் இருந்து எழுந்ததும் முதன் முதலில் கண் விழித்து உங்களது வலது உள்ளங்கையை காண வேண்டும் என நமது முன்னோர்கள் அடிக்கடி நம்மிடம் கூறுவதுண்டு.

ஆன்மீகப்படி ஒரு மனிதன் ஆழ்ந்த உறக்கத்தில் இருநது விழிதது கண திறநது முதன முதலில காணும பொருட்கள் மங்களகரமாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது.

அந்தவகையில் ஆன்மீக நெறிப்படி காலையில் கண் விழிததும என்ன என்ன பொருடகளை பாரததால என்ன பயன வநது சேரும என்று இங்கு பாரபபோம.

தூக்கத்தில் இருந்து எழுந்ததும் செல்வ மகளான மகாலட்சுமியின் படத்தை பார்ப்பதால் அன்றைய தினம் மங்களங்கள் பல உண்டாகும்.

தூக்கத்திலிருந்து கண் விழிக்கும்போது முகம் பார்க்கும் கண்ணாடியில், தன் முகத்தையே பார்ப்பதால் லட்சுமி கடாட்சம் ஏற்படும்.

உங்களின் அன்பிற்குரியவர்களான தாய், மனைவி அல்லது உங்கள் குழந்தைகள் ஆகியோரின் முகத்தில் விழிப்பதும் நல்லது. (தொடரும்)


# மலிங்க குறிவைத்துத் தாக்கினார் இறுதி நிமிடம் குறித்து தாகூர்

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான இறுதிப்போட்டியில், கடைசி பந்தில் ரன் அடிக்க முடியாமல் போனது குறித்து சென்னை அணி வீரர் ஷர்துல் தாகூர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

கடைசிப் பந்தை எதிர் கொண்ட அவர் மலிங்க வீசிய அந்தப் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இதனால் சென்னை அணி ஒரு ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. அனுபவ வீரர் ஹர்பஜன்சிங் இருக்கும் போது தாகூரை களமிறக்கியதும், அவரால் வெற்றிக்கான ஓட்டத்தை எடுக்க முடியாததும் பெரும் சர்ச்சையையும் விவா தங்களையும் ஏற்படுத்தியது.

போட்டி நடந்த ராஜீவ் காந்தி சர்வதேச கிரிக்கெட் மைதானம் மிகப்பெரியது. பந்து எல்லைக்



கோட்டுக்கு அருகில் சென்றால் இரண்டு ஓட்டங்கள் எடுப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஸ்டம்பை குறிவைத்து மலிங்க பந்து வீசிக் கொண்டிருந்தார்.

அவர் யோர்க்கர் வீசும் போது அது கொஞ்சம் தவறினால் கூட, ஸ்கொயர் லெக் திசையில் அடித்து விடலாம் என்று நினைத்தேன். அதேபோல், முதல் பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுத்தேன். எதிர் முனையில் நின்று கொண்டிருந்த ஜடேஜா பந்தினை தூக்கி அடிக்க வேண்டாம் என்று அறிவுரை கூறினார்.

கடைசிப் பந்தினை எல்லைக் கோட்டை நோக்கி அடித்துவிட்டு ஓட்டம் ஓட வேண்டும் என்று தான் திட்டமிட்டேன். பந்தினை தொட்டுவிட்டால் எப்படியும் எளி தில் ஒரு ஓட்டம் ஓடியிருக்கலாம் என நினைத்தேன். இடது காலை நகர்த்தி, பெரிய ஷாட் அடித் திருக்க வேண்டும். சிக்சர் அடிக்கும் திறமை எனக்கு உள்ளது.

பதற்றமான அந்தத் தருணத்தில் யாராவது ஒருவர் தோற்கத் தான் வேண்டும். யாரேனும் ஒருவர் வெற்றி பெற வேண்டும். எதிர்பாராதவிதமாக நாங்கள் தோற்க வேண்டியதாகிவிட்டது. (க)

# வளர்ந்து வரும் இலங்கை அணியின் பயிற்சியாளராக சமிந்தவாஸ் நியமனம்



இலங்கையின் வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேட்ச் பிக்சிங்கில் ஈடுப்பட்டதாக ஐசிசியின் குற்றச்சாட்டின் விளைவாக இலங்கை வளர்ந்து வரும் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதிவியிலிருந்து மே 11 ஆம் திகதி அவஷ்கா குணவர்த்தன நீக்கப்பட் டார்.

இந்நிலையில், மே 14 ஆம் திகதி நடந்த இலங்கை கிரிக்கெட் ஆணையத்தின் நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் வளர்ந்து வரும் கிரிக்கெட் அணி யின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸை நியமிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வளர்ந்து வரும் அணி அடுத்த மாதம் தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில் இத்தொடரிலிருந்து இலங்கை வளர்ந்து வரும் அணியின் தலைமை பயிற்சியாளராக சமிந்தவாஸ் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.(க)


# கேள்வி அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம் (Council Fund) - 2019

## நகராட்சி மன்றம் - சாவகச்சேரி

01. தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோருகின்றார்.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30. 06.2016 ஆந் திகதிய **04/2016(i)** ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படலாம்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி தொலைபேசி - 021 227 0498, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2019.05.17 ஆம் திகதியிலிருந்து 2019.06.07 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 14.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி இடமிருந்து 2019.05.17ஆம் திகதியிலிருந்து 2019.06.07 ஆம் திகதிவரை மு.ப 9.00 மணிக்கும் 14.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபாய் 2000/= (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக் குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரி எனும் முகவரிக்கு 2019.06.07 ஆம் திகதி பிற்பகல் 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது 2019.07.26) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில்(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப்பிணை வைப்பு (ரூபாய்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(3)2/ CF/01/2019 | புலுட்டையன் பிள்ளையார் வீதி புனரமைப்பு | 1.321 | 03 மாதம் | C9 (வீதி) | 13,220.00 | 2019.08.23 |
| NP/14/41(3)2/ CF/02/2019 | பொன்னர் வீதி புனரமைப்பு | 0.936 | 03 மாதம் | C9 (வீதி) | 9,370.00 | 2019.08.23 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 2019.05.31 ஆம் திகதி பி.ப. 14..30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலக கூட்ட மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**
**2019.05.17**

(C-6399)


# உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் வெல்லும் சவுரவ் கங்குலி தெரிவிப்பு



இந்த முறை உலகக் கோப் பையை பாகிஸ்தான் வெல்லும் என்று முன்னாள் இந்திய அணித்தலைவர் கங்குலி கூறியிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் இம்மாதம் 30 ஆம் திகதி உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் தொடங்க உள்ளது. இந்தத் தொடருக்கு இன்னும் 14 நாட்களே உள்ள நிலையில், முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலரும் எந்த அணி கோப்பையை கைப்பற்றும் என்பது குறித்து தங்களது கணிப்பை தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சவுரவ் கங்குலியும் தனது கணிப்பைத் தெரிவித்துள்ளார். ஆனால், அவரது கணிப்பு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அதாவது பாகிஸ்தான் அணி உலகக்கோப்பையை வெல்லும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கங்குலி கூறுகையில், 'பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக பாகிஸ் தான் உலகக்கோப்பைத் தொடரில் நிச்சயம் சிறப்பாக விளையாடும். அதற்குக் காரணமும் இருக் கிறது. 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற இருபது-20 உலகக் கோப்பையில் பாகிஸ்தான் சம்பியன்.

2017 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற சம்பியன்ஸ் கோப்பை போட்டியிலும் இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி கோப்பையை வென்றிருக்கிறது. அது தவிர இப்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலும் பாகிஸ்தான் சிறப் பாக ஆடி வருகிறது.

எனவே பாகிஸ்தான், இங்கிலாந்தில் சிறப்பாக விளையாடும். உலகக்கோப்பை தொட ரில் இந்தியா, பாகிஸ்தான், அவு ஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் அரை யிறுதிக்கு முன்னேறும் என அவர் தெரிவித்துள்ளார். (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378
என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## முள்ளிவாய்க்கா...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெறும் என முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழு அறிவித்துள்ளது. எந்தவிதமான சுயஅரசியல் நோக்கங்களும் இன்றி இந்த நிகழ்வினை இந்தக் குழு ஏற்பாடு செய்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது. அதற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களின் பின்னர் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக மக்கள் மத்தியில் ஒருவித அச்ச நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது. இருந்த போதிலும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்கும் அவர்களுக்கான நீதிக்காக குரல் கொடுப்பதற்குமாக முள்ளிவாய்க்காலில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஒன்று கூடுவதற்கு நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம். தமது உறவுகளை இழந்த மக்கள் முள்ளிவாய்க்கால் மண்ணில் கண்ணீர்விட்டு அழுது தீபம் ஏற்றி அஞ்சலி செய்வதற்கு அவர்களுக்கு முழு உரிமையும் இருக்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் சர்வதேச சமூகத்தின் கவனம் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் இருந்து திசை திரும்பியிருக்கின்ற நிலையிலும், அரசாங்கம் தற்போதைய சூழ்நிலைகளை எமக்கு எதிராகப் பல்வேறு வழிகளிலும் பயன்படுத்தி வருகின்ற நிலையிலும், எமது உரிமைகள் தொடர்பிலும் எமக்கு கிடைக்கவேண்டிய நீதி தொடர்பிலும் நாம் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றோம் என்பதை எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் இன்று எமக்கு இருக்கின்றது.

இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினை பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுடன் தொடர்புபட்டது. நாடுகளுக்கு இடையில் அவ்வப்போது ஏற்படக்கூடிய போர்களும், சர்வதேச பயங்கரவாத சக்திகளினால் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் நாசகார செயற்பாடுகளும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான நீண்டகால நியாயமான போராட்டத்தையும் இனப்படுகொலைக்கான நீதிக்கான போராட்டத்தையும் பாதித்துவிடக்கூடாது.

இது சம்பந்தமாக பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டிய தேவை சர்வதேச சமூகத்துக்கு இருக்கிறது. இலங்கையில் உள்ள எல்லா இனங்களுக்கும் மதங்களுக்கும் சட்டம் சமனானது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் அவர்களின் சுயநிர்ணய உரிமையினை நிலைநாட்டும் வகையிலும் உச்சபட்ச அதிகாரம் கொண்ட சமஷ்டி கட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதே இலங்கையில் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தும் என்பதை ஐ.நா மற்றும் சர்வதேச சமூகம் ஆகியவை புரிந்து கொண்டு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஒன்பது மாகாணங்களுக்கும் நிரந்தர சுயாட்சி உரித்தை வழங்குவதை நாம் வரவேற்கின்றோம்.

ஆனால் எந்த இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களும் இணைந்து செயற்பட முன்வந்தால் அவ்வாறான இணைப்புக்குச் சட்டத்தில் இடமளிக்கப்படவேண்டும். வடகிழக்கு இணைப்பில் முஸ்லிம் சகோதரர்களுக்கு தனியலகொன்றை வழங்கவேண்டும் என்பதே எமது கோரிக்கை. இவற்றை அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் சர்வதேச சமூகமும் கவனத்திற்கு எடுக்கவேண்டும்.

ஆகவே இவ்வருட முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் நிகழ்வினை மிகவும் அமைதியான முறையிலும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணில் நின்று நாம் அஞ்சலி செலுத்தி நடத்துவது அவசியமாகியுள்ளது.

அத்துடன் சர்வதேச சமூகத்துக்கு எமது செய்தியினைக் கூறுவதும் இந்தச் சமயத்தில் அவசியமாகியுள்ளது. எனவேதான் சர்வதேச சமூகத்தின் கடப்பாடு பற்றி இங்கு நாம் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த காலங்களைப் போல மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரிமைகள் மற்றும் நீதி ஆகியவை தொடர்பில் தமது உறுதியான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவது அவசியமாகின்றது. அன்றைய தினம் நானும் தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்களும் முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவு கூரல் நிகழ்வில் கலந்து கொள்ளவிருக்கின்றோம் என அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## மே-18 ஐ அனு...

சமாதானத்தின் தசாப்த நிறைவு தினம் என்ற பெயரில் யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் இந்த முறையும் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ளமையை முன்னிட்டு கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு உட்பட்டு, நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கான உரிமை அனைவருக்கும் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அவசரகால சட்டம் நடைமுறையில் உள்ள தருணத்தில், இவ்வாறான நினைவு தின நிகழ்வுகளை நடத்துகின்றமை சர்ச்சைக்குரிய விடயமா என இதன் போது கேள்வி எழுப்பப்பட்டது.

அவசரகால சட்டமும், நினைவு தின அனுஷ்டிப்பும் இருவேறு விடயங்கள் என சுட்டிக்காட்டிய ராணுவ தளபதி, நினைவு தினத்தை உரிய விதிமுறைகளின் கீழ் முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, இலங்கையில் கடந்த ஏப்ரல் 21ஆம் திகதியன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தின் விசாரணைகள் குறித்தும் இதன்போது கருத்து வெளியிடப்பட்டது.

இலங்கையில் மற்றுமொரு பயங்கரவாதத் தாக்குதல் நடாத்தப்படுவதற்கான சாத்திய கூறுகள் கிடையாது என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு, கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அவர், பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

அத்துடன், ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி முதல் மூன்று மாதங்கள், 9 மாதங்கள் மற்றும் இரண்டு வருடங்கள் என்ற அடிப்படையில் குறுகிய, இடை மற்றும் நீண்டகால திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, புத்தளம் - நாத்தாண்டி - துன்மோதர பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் ராணுவத்திற்கு எந்தவித தொடர்பும் கிடையாது என ராணுவ தளபதி குறிப்பிட்டார். இராணுவத்தினர் இந்த சம்பவத்துடன் தொடர்புபடவில்லை என்பதில் தனக்கு 95 சதவீத நம்பிக்கையுள்ளதாகவும் அவர் கூறினார்.

இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்படும் வகையில் வெளியான சிசிடிவி காணொளியை திரையில் ஒளிபரப்பியது பற்றி விசாரணைகளை நடத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கியிலுள்ள பெல்ட்டை சரிசெய்யும் வகையிலான காட்சி, தவறான பிரதிபலிப்பை வெளிப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் தாம் தொடர்ச்சியாக விசாரணைகளை நடத்தி வருவதாக கூறிய அவர், விரைவில் உண்மை தன்மையை வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டார். (ம)

## இராணுவ அதி...

41 வயதுக்கும் இடைப்பட்ட தமிழர்கள் எட்டுப் பேர் காணாமற்போயிருந்தனர். மறுநாள் இவர்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரின் பிடியில் இருந்து, காயங்களுடன் தப்பிய ஒருவர், இந்த தகவலை வெளிப்படுத்தியதை அடுத்து, நடத்தப்பட்ட தேடுதலில் எட்டு பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.

இதையடுத்து, 16 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு அப்போது சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

15 இராணுவத்தினரையும் விளக்கமறியலில் வைத்த் நீதவான் அன்னலிங்கம் பிரேமசங்கர், சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார். இராணுவப் பொலிஸார் மற்றும் பொலிஸார் உள்ளிட்டோரின் முன்னிலையில் சடலங்கள் புதைக்கப்பட்ட இடம் கண்டறியப்பட்டு அவை மீட்கப்பட்டன.

15 இராணுவத்தினரில் 10 பேரை விடுவித்த சட்ட மா அதிபர் திணைக்களம், 5 இராணுவத்திருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்தது. 19 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த வழக்கின் இறுதி தீர்ப்பு 2015ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் லலித் ஜெயசூரிய, பிரீதி பத்மன் சூரசேன ஆகியோரால் வழங்கப்பட்டது.

இதன்படி, ஸ்ராப் சார்ஜன்ட் சுனில் இரத்நாயக்க என்ற இராணுவ இளநிலை அதிகாரி குற்றவாளியாக காணப்பட்டு, அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த ஏனைய நான்கு படையினருக்கும் எதிராக முன்வைக்கப்பட்ட சான்றுகளில் சந்தேகங்கள் இருப்பதாக கூறி, அவர்கள் நால்வரையும் நீதிபதிகள் விடுதலை செய்துள்ளனர். இந்த தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தூக்குத் தண்டனைத் தீர்ப்பை கொழும்பு உயர் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. (ம-10)

## கைது செய்யப்ப...

கையை நான் ஏற்கவில்லை. ஒன்றரை ஆண்டுகள் கழித்து மீண்டும் தொலைபேசி அழைப்பொன்றை தாருங்கள் அப்போது பார்க்கலாம் என்று கூறிவிட்டேன் என இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க கூறினார்.

அமைச்சர் ரிஷாத் கோரிக்கையை முன்வைத்தார் அதனை அழுத்தமென கூற முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

இராணுவ தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கடந்த 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதலின் போது கைதுசெய்யப்பட்ட நபர்களை விடுவிக்கக்கோரி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அழுத்தம் கொடுத்ததாக குற்றம் சுமத்தப்படுகின்றதே இது குறித்த உண்மை என்ன? என வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாரை விடுவிக்க வேண்டும் என ரிஷாத் கேட்டுக்கொண்டார் எனக் கேட்ட போது, அவர் கூறிய பெயர் எனக்கு இப்போது நினைவில் இல்லை, அங்கு எல்லாம் முஹம்மட்களாக இருந்தனர். அவர்களின் உரிய பெயர் எனக்குத் தெரியவில்லை எனத் இராணுவத் தளபதி தெரிவித்தார். (ம)

## அச்சமின்றி மக்...

மையான பாதுகாப்பினை வழங்க வேண்டும்.

மக்கள் ஒரு இடத்தில் அதிகமாக ஒன்று திரள்வதையும் தவிர்த்துக் கொள்வது அவசியம். பௌத்தமதத்தின் போதனைகளின் ஊடாக பாரதூரமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெசாக் தின வாழ்த்துச் செய்தியிலேயே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முப்பது வருட கால பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டிலே சமாதானத்தை நிலைநாட்டி பத்தாண்டுகள் நிறைவும் இந்த வெசாக் போயா தினத்தன்று அமைந்துள்ளது.

நாட்டை பாதுகாக்கும் நடவடிக்கையின் போது தமது உயிர்களை தியாகம் செய்த பல்லாயிரக்கணக்கான இராணுவ வீரர்களுக்காகவும் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் இந்த உத்தம வெசாக் பௌர்ணமி போயா தினத்தில் அனைத்து மக்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன். (ம)

## அரசியலே நாட்டி...

திஸாநாயக்க குற்றம் சுமத்தினார். நேற்று முன்தினம் புதன்கிழமை ஹட்டன் டிக்கோயா நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது மக்கள் மத்தியில் மேலும் உரையாற்றிய முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க,

இன்று மக்கள் மத்தியில் சந்தேகம், வைராக்கியம், விசுவாசம் போன்றவையை தூண்டும் செயற்பாடுகள் தான் தற்பொழுது நாட்டில் காணப்படுகிறது. ஒரு ஊடகம் ஒன்றில் நான் ஒரு செய்தியை பார்த்தேன். அதில் மகிந்த ராஜபக்ஷ இருந்திருந்தால் பாதுகாப்பு செயலாளராக கோத்தபாய ராஜபக்ஷ இருந்திருந்தால் குண்டு தாக்குதலை மேற்கொண்ட எட்டு பேரையும் வெள்ளை வானில் தூக்கி இருப்போம் என எழுதபட்டிருந்தது இந்த செய்தியின் ஊடாக என்ன தெரிய வருகிறது என்றால் வெள்ளை வான் கலாசாரம் நல்லது என எழுதப்பட்டிருந்தது.

இந்த அரசாங்கத்தை அரசியல்வாதிகள் ஆள்வதைவிட இந்த நாட்டில் உள்ள இராணுவத்தினர் பொறுப்பேற்றால் நல்லது என நினைக்கிறேன். ஏனெனில் அப்போதுதான் இந்த நாட்டில் அனைவரும் சமாதானத்தோடு வாழ முடியும். அமைச்சர் ரிஷாத் பதியூதினை தாக்கினால் அனைவரும் வீரராவர்.

இடம்பெறுகின்ற தாக்குதல்களை நாம் சரிவர இனங்கண்டால் மாத்திரம் தான் யார் இந்த தாக்குதலை மேற்கொண்டார்கள் என எம்மால் இனங்காண முடியும். தாக்குதலை மேற்கொண்டவர்கள் எதற்காக கிறிஸ்தவ ஆலயங்களையும், நட்சத்திர ஹோட்டல்களையும் தெரிவு செய்து தாக்குதலை மேற்கொண்டனர். அரசாங்கத்தின் மீது உள்ள கோபம் அல்ல. வெளிநாடுகளோடு இருந்த கோபத்தின் காரணமாகத்தான் இந்த மூன்று இடங்களையும் தெரிவு செய்து தாக்குதலை மேற்கொண்டனர்.

வெளிநாடுகளில் உள்ள அரசியல்வாதிகளிடம் கோபத்தின் காரணமாக இலங்கை நாட்டில் தாக்குதலை மேற்கொண்டனர். பொதுமக்களுடைய பாதுகாப்பு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதிகூடிய முதல் செலவிடபடுகிறது. பாதுகாப்பு பிரிவினருக்கு புதிய அரசாங்கம் உருவாக்கபட்டு ஆறு மாத காலப்பகுதியில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் முரண்பாடு ஏற்பட்டது என்றார். (ம)


மஹஜன சம்பத
திகதி 2019/05/16
சீட்டிழுப்பு இலக்கம் 3918
S 8 7 3 2 1 9

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1543 திகதி 2019/05/16
G 13 15 17 24
0244393

நீரோகா
திகதி 2019/05/16
சீட்டிழுப்பு இலக்கம் 547
சிம்மம் 36 37 38 54

கொவிசெத
திகதி 2019.05.16
சீட்டிழுப்பு இலக்கம் 2121
Z 05 24 29 43

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரம்பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் எமரல்ட் ஐல் மூலம்
மலேசிய தொழிற்சாலையில்
ஃபோர்க்லிஃப்ட் டிரைவர் (Forklift Driver) வேலைவாய்ப்பு
சம்பளம் ரூ.75,895/-
முன்னனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி ஏற்பாடு!
3 வருட கம்பனி விசா
விசா, டிக்கட் கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்!
தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, விமானச்சீட்டு வழங்கப்படும்
8 மணி + OT (மாதம் 78 மணி) / வாரம் 6 நாள் வேலை. வயதெல்லை : 18-40
221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் ஷோரூம் புடவையகம் The Loverக்கு அருகே
email: jaffna@emeraldisle.lk
www.emeraldisle.lk
077 36 16 798
021 221 9 221
License No. 2268
(C-6406)

## யாழ்.பல்கலை மாணவர்கள் உட்பட...

பதாகைகள் என்பன மாணவர் ஒன்றியத்தின் அலுவலக அறையில் மீட்கப்பட்டன.

அதனையடுத்து மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அத்துடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் மீட்கப்பட்டது. அதனால் சிற்றுண்டிச்சாலை நடத்துநரும் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மாணவர் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் ஆகிய மூவரும் நேற்று 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை மாணவர்கள் இருவரும் சிற்றுண்டிச்சாலை நடத்துநரும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சட்டமா அதிபரிடமிருந்து தொலைநகல் மூலம் தமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய மூவரையும் பிணையில் விடுவிக்க ஆட்சேபனை இல்லை என்று கோப்பாய்பொலிஸார்மன்றுரைத்தனர்.

மாணவர்களை பிணையில் விடுவிப்பது மட்டுமல்ல, அவர்களை அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிப்பதே எமது நோக்கமாகும். பொலிஸார் இந்த வழக்கை உரியமுறையில் விசாரணை செய்தால் மாணவர்கள் இருவரும் சிற்றுண்டிச்சாலை நடத்துநரும் வழக்கிலிருந்தே விடுவிக்க முடியும் என்று சட்டத்தரணி கே.சுகாஷ் சமர்ப்பணம் செய்தார்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மன்று, மூவரையும் தலா ஒரு லட்சம் ரூபாய் ஆள்பிணையில் விடுவிக்க உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது. (ம)

## முள்ளிவாய்க்...

817 நாளாக தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முள்ளிவாய்க்காலில் நேற்று அடையாள உண்ணாவிரதமும் அஞ்சலி நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டது.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 10ஆம் ஆண்டு நிறைவில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி தொடர்ந்து 817 நாட்களாக வவுனியாவில் போராடி வரும் உறவுகளால் இந்த அடையாள உண்ணாவிரதமும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த அடையாள உண்ணாவிரதத்திலும் அஞ்சலி நிகழ்விலும் தமது பிள்ளைகளை இராணுவத்திடம் கையளித்த பெற்றோர் கலந்து கொண்டு கண்ணீர் மல்க அஞ்சலியை செலுத்தினர். (ம-3)

## நல்லூர் ஆலயத்திற்கு குண்டு...

பரபரப்பு ஏற்பட்டதுடன், இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர் கோவிலுக்கு குண்டு வைப்போம் என்று எழுதப்பட்ட கடிதம் நேற்று ஆலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தை ஆலய நிர்வாகத்தினர் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் கையளித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தின் பின்னர், நல்லூர் ஆலயத்தில் இராணுவம் உட்பட பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நல்லூர் பகுதியில் இரண்டு முஸ்லிம் வீடுகள் அமைந்துள்ளதால், அந்த வீடுகள் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டதுடன், நல்லூர் பிரதேசத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் வெளிமாவட்டத்தவர்கள் தொடர்பிலும் இராணுவத்தினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதுடன் தகவல்களையும் திரட்டி வருகின்றனர்.

நல்லூர் ஆலய வளாகத்தில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ம-101)

New Zealand, Australia & Canada
STUDENT VISA => WORK VISA => PR
ஏற்பாடுகளுடனான
Hotel Management
FAST TRACK - ENTRY LEVEL - DIPLOMA LEVEL
விசேட ஆங்கில வகுப்புக்களுடனான கற்கைநெறி
விளக்கக் கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்
20-05-2019 திங்கள் காலை 10 மணி
விபரங்களுக்கு 0777 324 004, 021 222 00 11
SIKARAM ACADEMY
221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம் ஷோரூம் புடவையகம் The Lover அருகே
www.sikaram.lk
Sikaram Academy
(C-6406)

## இலங்கை ஒரு பௌத்த நாடு...

துறை அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுகவீனமுற்றிருக்கும் கொட கொட தம்மாவாஸ தேரரின் சுகநலம் விசாரிக்க நேற்று அமைச்சர் சென்ற வேளையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

இவ்வாறான மோதல் சூழ்நிலைகள் நாட்டிற்குள் பாரிய வன்முறையை தோற்றுவிக்க முடியும். அவ்வாறானதொரு சூழலையே தற்போது எமது நாட்டில் காண முடியுமாக இருக்கிறது.

ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை அமைதிப்படுத்தி மக்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதே தலைவர்களாக தற்போது நாம் செய்ய வேண்டிய கடமையாக உள்ளது. அதற்காக நாம் அனைவரும்ஒரே இனமாக செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். ஒரே தேசம், ஒரே இனம், ஒரே நீதி என்ற தொனிப்பொருளின் கீழ் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். இலங்கை என்பது பௌத்த நாடு என்பதை நினைவில் வைத்து செயற்பட வேண்டும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ம)

## யாழ்.பல்கலை...

அதிகாரிகளுக்கும் பீடாதிபதிகளுக்கும் இடையில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் கலந்துரையாடலையடுத்து உத்தியோகபூர்வமாக பதிவாளர் அறிவிப்பார் என்று அறிய முடிகின்றது.

பல்கலைக்கழகத்தில் கல்வி சார் நடவடிக்கைகள் மீள ஆரம்பிப்பது தொடர்பான அறிவித்தல் வெகுசன தொடர்பு சாதனங்கள் ஊடாக பதிவாளர் அறிவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினரின் சோதனைகளின் பின் பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் துணைவேந்தர்களை முடிவெடுக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கிய நிலையில் நாட்டின் சில பல்கலைக்கழகங்கள் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் சில பல்கலைக்கழகங்கள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய ஆஸ்தான குரு பரம்பரையைச் சார்ந்த அமரர் சுந்தரம் ஐயா அவர்களுடைய மகளும் ஆலய பிரதம குருக்களான நா.பா.ஸ்கந்தரூபக் குருக்களின் பேர்த்தியாருமாகிய

திருமதி
அமிர்தாம்பிகை அம்மா
நாகேந்திரக்குருக்கள்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்திப்போமாக.

பொறுப்புரிமையாளர் சபை
மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், காரைநகர்.
(C-6405)

நெல்லியடியில் போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி வடமராட்சி அனுபவம் மிக்க வளவாளர்களால்
25ஆம் திகதி நடைபெறவுள்ள சமயபாட ஆசிரியர் தேர்வு
17,18ஆம் திகதிகளில்
சனி 8.30 – 10.30 கல்விப் பொது அறிவு
4.00 – 6.30 (IQ)
ஞாயிறு 8.30 – 10.30 கல்விப் பொது அறிவு
வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் தேர்வு
மொழித்திறன் ...
பொது உளச்சார்பு வகுப்பு ...
புள்ளிவிபரவியலாளர், நீதிமன்ற உதவியாளர், நீதிமன்ற MA, வருமானப்பரிசோதகர் SLAS, SLEAS வகுப்புக்கள்.
அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான (DO) ... வகுப்புகள்.
இடம் : உயர்கல்லூரி நெல்லியடி HNB Assurance (கட்டிடம் மேல்மாடி)
தொடர்புகளுக்கு 077 435 0958
(8724)

போட்டிப்பரீட்சை விசேட வகுப்புக்கள்
முகாமைத்துவ உதவியாளர் வருமானப் பரிசோதகர்
நாளாந்த கட்டணம் 250/=
பிரிவு – I சனி 9.00 - 1.00
பிரிவு – II ஞாயிறு 9.00 - 1.00
ஆசிரியர் தெரிவு
சனி, ஞாயிறு, திங்கள் 9.00 - 3.00
பதிவாளர், சட்ட மாணவி, புள்ளிவிபரவியலாளர், SLAS, SLEAS, ஜேவர், புனர்வாழ்வு உத்தியோகத்தர் உட்பட சகல பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன
தொடர்பு : 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(C-6402)

Spoken English With Grammer
(With Canadian Institute Certificate)
O/L, A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்ல விரும்புவோர் அனைவருக்குமான பயன்தரு வகுப்புக்கள் (சிறுசிறு குழுக்களாகவும், தனிப்படவும் பயிற்சிகள் வழங்கப்படும்)
புதிய பிரிவுகள் ஆரம்பம் :-
சனிக்கிழமை, வியாழக்கிழமை பி.ப. 3.00 மணி
ஒவ்வொரு பிரிவுகளிலும் 15 பேர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவதால் பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள். (C-6404)
CTHI
T.P 077 104 1923, 021 314 6171
உப்புமடம் சந்தி, K.K.S வீதி கோண்டாவில், யாழ்ப்பாணம்

## 762 கைதிகள் விடுதலை...

கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள நேற்று வியாழக்கிழமை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, பொது மன்னிப்பின் அடிப்படையில், நாட்டின் சிறைகளிலிருந்து 736 ஆண்களும், 26 பெண்களும் என மொத்தமாக 762 பேர் விடுவிக்கப்படவுள்ளனர். (ம)

போட்டிப்பரீட்சை வகுப்பு
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA)
ஆரம்பம் 18.05.2019 சனிக்கிழமை 9.30 AM
சமயபாட ஆசிரியர் தெரிவுக்கான விசேட வகுப்பு 18,19ம் திகதிகளில்
கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 182 3534
(8819)

வீடு விற்பனைக்கு
வட்டு. கிழக்கு வட்டுக்கோட்டை, குளிப்பன் வீதியில் 1 3/4 பரப்புடைய வீடு சகல வசதிகளுடனும் விற்பனைக்கு உண்டு விலை பேசித் தீர்மானிக்கலாம். 0778037876
(C-6403)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து, வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623
(8817)

கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்

வீட்டு கையியக்க மெசின் | வர்த்தக கையியக்க மெசின் | வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்
தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca
(8716)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6423)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.